# தேர்ந்த கட்டுரைகள்

விடுதலைப்புலிகள் பற்றி
அரசு குழப்பமடைகிறது

இலங்கைத் தமிழரின்
அரசியலில் இந்தியாவின்
இரண்டக நிலை

பேச்சுவார்த்தையில்
அரசாங்கத்தின் அடுத்த
கட்ட நடவடிக்கை என்ன?

# நெருங் போர்

கொட்டு செங் குருதிக் களத்தினி லங்கே
கொதித்தெழும் மறவர் தம்மிடையே
கட்டுடல் வீரன் ஒரு தமிழ் நெஞ்சன்
கடலென அதிர்ந்தொலி செய்வான்!

தமிழர் பொன்னாட்டைத் தாயக மண்ணைத்
தரமறுக் கின்றவ னெவனோ...?
இமை நொடிப் போதி லெழுந்திரு தமிழா?
இன்னுயிர் நமக்கொரு பொருளோ?

ஓடுக நாணை! ஓடுக பகைவர்
உலவிடும் திசை வழி யெல்லாம்!
தேடுக தமிழர் தேசத்தின் மானம்..
தெய்வத்தில் ஆணையிட்டெழடா!

பைந்தமிழ் மொழியை எவன் பழித்தாலும்
பழித்தவன் தலை கொண்டுவாடா!
ஐந்து துண்டாக்கி அடுப்பினில் வைப்போம்?
அது நமக் குணவாகும் போடா!

கருவினில் அன்னை வளர்த்ததும் இந்தக்
கைகளைத் தந்ததும் எல்லாம்
செருவினில் வெற்றிக் கொடியுடன் நின்று
சிரிப்பதற் கன்றோடா தமிழா!

ஆழிபோல் ஆழி அலைபோல் [illegible]
ஆடடா... போர்க்களம[illegible]!
நாளிகை யொன்றில் நாடாள வேண்டும்
நாமென்று சிங்கம் போலார்த்தான்!

சங்கொன்று களத்தில் முழங்கிற்று வீரம்
தானையும் முழங்கிற்று கண்[illegible]!
பொங்குபோர்க் களத்தில் மாற்றாரும [illegible]!
போரென்று கொட்டிற்று முரசம்!

அதிர்ந்தன திசைகள்! அசைந்தன மலைகள்
அழிந்தன காடுகளெல்லாம்!
உதிர்ந்தன கரங்கள்! உடைந்தன தலைகள்!
உயர்ந்தன பிணமலைக் குவியல்!

உணர்ச்சிக் கவிஞர் காசி ஆனந்தன்.

# தேர்ந்த கட்டுரைகள்

வெளியீடு - 28

வெளியீடு:
அரசியல்துறை,
தமிழீழ விடுதலைப் புலிகள்,
தமிழீழம்,
பெப்ரவரி 1995.

## உள்ளே...


| விடயம் | பக்கம் |
|---|---|
| 1. விடுதலைப் புலிகள் பற்றி அரசு குழப்ப மடைகின்றது | 01 — 10 |
| 2. தமிழ்ப்படைப்புலகம் இன்றும் நாளையும் | 11 —18 |
| 3. இலங்கைத் தமிழரின் அரசியல் சிக்கல் நிலையும் இந்தியாவின் இரண்டக நிலையும் | 19—24 |
| 4. பூநகரிக் கடற்பாதையைத் திறத்தல் | 25—30 |
| 5. இன்றைய தமிழகத்தில் இலங்கைத் தமிழர் படும்பாடு | 31 - 38 |
| 6. பேச்சுவார்த்தையில் அரசாங்கத்தின் அடுத்தகட்ட நடவடிக்கை என்ன? | 39—46 |
| 7. சமஷ்டி அரசியல் முறை | 47 —59 |

(ஈழநாடு 01.01.95)

# விடுதலைப் புலிகள் பற்றி அரசு குழப்பமடைகின்றது

இனச் சிக்கலின் தீர்வுக்கு முன்னுரிமை கொடுத்ததற்கான பெருமை திருமதி. சந்திரிகா அவர்களைவிட விடுதலைப் புலிகளுக்கே உரித்தானதாகும். இப்படியே தமிழ் மக்களும் கருதுகின்றார்கள். அரச படையினரின் மேலாண்மை மேலோங்கியிருக்கும் என்று கருதியிருந்த ஜெயவர்த்தனா, பிரேமதாசா மற்றும் தமது அவதானத்திற்கு அப்பால் எதுவும் தெரியாதிருந்த விஜயதுங்கா போன்றோர் போலன்றி, விடுதலைப் புலிகளுடன் பேச்சுவார்த்தை நடாத்துவதன்மூலம் மாத்திரமே இனச்சிக்கலுக்கு தீர்வை எட்ட முடியுமென்பதை திருமதி. சந்திரிகா அவர்கள் உணர்ந்திருந்தார்.

தற்போதைய அரசாங்கம் பதவிக்கு வந்த காலத்திலிருந்து, இனப்பிரச்சனையை எப்படியான முறையில் கையாண்டு வருகிறது என்பதை யாராவது ஆராய்ந்தால், ஒரு முக்கிய அம்சம் மட்டுமே தோன்றும். அதுவும் குழப்பமாகவே இருக்கும்.

தனது அரசு அமைதியை எட்டுவதற்கான பேச்சுவார்த்தையைத் தொடர்ந்தும் நடாத்தி வருகிறது. படைமேலாளர் ஒருவரை உள்ளடக்கிய அரச பிரதிநிதிகள் குழு ஒன்று புத்தாண்டுக்கு முன்னரோ அல்லது அதற்குப் பின்னரோ யாழ்ப்பாணத்திற்குச் செல்லும். இவ்வாறு பிரதிப் பாதுகாப்பு மந்திரியான அநுருத்த ரத்வத்த அவர்கள் டிசம்பர் மாதம் 23ஆம் நாளன்று நாளேடுகளுக்குத் தெரிவித்தார். குடாநாட்டு மக்கள் பாதுகாப்பாகப் பயணம் செய்யக்கூடிய பாதையொன்றைத்

திறப்பது பற்றிய முக்கிய விடயமும் ஆராயப்படும் என்றும் அவர் தெரிவித்தார். வடகீழ் மாகாண சபையின் ஆளுநரா கத் திரு. லயனல் பர்ணாந்து அவர்கள் பதவி வகித்த காலப் பகுதியில் பெரும் ஊழல் இடம்பெற்றதாகவும், பாரபட்சம் காட்டப்பட்டதாகவும் குற்றச்சாட்டு எழுந்திருக்கிறது. இரண் டாம் கட்டப் பேச்சுவார்த்தைகளுக்குப் பிரதிநிதிகள் குழுவை அரசு அனுப்பும் முன்னர் இது பற்றித் தெளிவுபடுத்துமாறு விடு தலைப் புலிகளிடம் கேட்கப்படும் என அரசு அறிவித்த இரண்டு நாட்களின் பின்னர் இப்போது இது வெளிவந்துள்ளது.

ஒரு அவசரமான தீர்மானத்தை எடுப்பதற்காகப் பிழை யான இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டதெனலாம். இந்தக் குற்றச்சாட்டை விடுதலைப் புலிகள் விடுக்காததால் அவர்கள் இதைத் தெளிவுபடுத்தவேண்டிய அவசியமில்லை. வடகீழ் மாகாண சபை நிர்வாகத்தில் சீர்கேடுகள் இடம்பெற்றதாகக் குற்றஞ்சாட்டி யாழ்ப்பாணத்திலுள்ள ஆசிரியர் தொழிற் சங்கம் ஒன்று சனாதிபதிக்கு இந்தஅறிக்கையை அனுப்பியிருந்தது. அதில் திரு. லயன்ஸ் பர்ணாந்து அவர்களின் பெயரும் குறிப்பிடப்பட்டி ருந்தது.வடக்கிலுள்ள அமைப்புக்கள் அனைத்தும் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டிலிருப்பதுபோல், இந்தத் தொழிற் சங்க மும் அவர்களின கட்டுப்பாட்டில் இருக்கிறது. அதற்காக இந்த விடயத்தைத் தெளிவுபடுத்துமாறு விடுதலைப் புலிகளைக் கேட் பதற்கும் அமைதியை எட்டுவதற்கான பேச்சுவார்த்தையைத் தொடர அதை இதனுடன் தொடர்புபடுத்துவதற்கும் அர சுக்கு எவ்விதமான நியாயமும் இருப்பதாகத் தெரியவில்லை.

இருப்பினும், இந்தவிடயம் பற்றி மேலதிகமாக நாங்கள் எதையும் தெரிந்துகொள்ள முன்னரே பிரதிப் பாதுகாப்பு மந்திரி தெரிந்தோ, தெரியாமலோ பேச்சுவார்த்தைகள் எல்லாம் காற்றோடுகாற்றாய்ப் போய்விட்டது என்ற ஒரு எண்ணத்தை ஏற்படுத்திவிட்டார். அவர் இந்த எண்ணத்தை ஏற்படுத்திய சில நாட்களுக்குப்பின், பேச்சுவார்த்தையை அரசு காலவரை யின்றி ஒத்திப்போட்டுள்ளதாக நாளேடுகள் அரச வட்டாரங்க ளைச் சுட்டிக் காட்டித் தெரிவித்திருந்தன.

தான் இழைத்த தவறைத் திருத்துவதற்கு அரசுக்குப் போதிய கால அவகாசம் இருந்தது. சந்திரிகா நிர்வாகத்தினது கபட மற்ற அரசியலில் தமிழ் மக்கள் தொடர்ந்தும் நம்பிக்கை வைக் கக்கூடியவாறு அரசின் அமைதித்திட்டம் நியாயமானதாக இருக்குமாயின், அது திரு. வே. பிரபாகரன் அவர்களுக்கு அரசி யல்ரீதியான பாதிப்பை ஏற்படுத்தும் என்ற தலைமைப்பீடத்தின்

தப்புக்கணக்கை இத்த நேரத்தில் மீளாய்வு செய்வது அவசிய மாகிறது. அதுவும் முன்புபோன்று அரசுவிட்ட ஒரு பெரிய தவ றாகவே இருக்கமுடியும்.

எந்தச் சுமூகமான நிலையை ஏற்படுத்த யுத்தத்தால் முடி யாமல் இருந்ததோ, அதைப் பேச்சுவார்த்தைமூலம் சாதிக்க லாம் என்ற நம்பிக்கை இன்று இல்லாது போயிற்று. ஏனெனில் யுத்தத்தைப்போன்று அரசியலிலும் தாங்கள் வல்லவர்கள் என் பதை விடுதலைப் புலிகள் நிரூபித்துக் காட்டியுள்ளனர். இதுவும் அரசைக் குழப்பத்திற்குள்ளாக்கியுள்ளது.

## பேச்சுவார்த்தைகள்

அதிகாரத்திற்கு வந்த உடனேயே வட பகுதியில் வாழும் மக் களின் அல்லல்களைத் தீர்க்கப்போவதாக இந்த அரசு அறிவித் தது. அதற்கு ஏற்றவாறே அது செயற்பட்டது. முதலாம் கட்டப் பேச்சுவார்த்தையின்போது கீழ்க்காணும் விடயங்களை உள்ளடக்கிய நிகழ்ச்சி நிரலுக்கு இரு பகுதியினரும் தங்கள் இணக்கத்தைத் தெரிவித்திருந்தனர்.

01. வட பகுதியில் வாழும் மக்கள் எதிர் நோக்கும் அன் றாடச் சிக்கல்களுக்குத் தீர்வுகாண்பது.

02. புனர்நிர்மாண மற்றும் புனர் வாழ்வுப் பணிகளை விரை வாக மேற்கொள்ளுதல்.

03. பொது மக்களுக்குப் பாதுகாப்பான போக்குவரத்துப் பாதையைத் திறந்துவிடுதல்.

04. பொருண்மியத் தடையை மேலும் நீக்குதல்.

05. போர் நிறுத்தத்திற்கு இட்டுச்செல்லக் கூடிய மோதல் தவிர்ப்பு ஒன்றை நடைமுறைப்படுத்துவதன்மூலம் யுத்த நிறுத்தத்தைக் கொண்டுவருவதற்கான வழிவகைகளை ஆராய்தல்.

இனச்சிக்கல்களுக்குத் தீர்வையெட்டுவது சம்பந்தமான அடிப் படை விடயங்களைத் தாங்கள் ஆராயமாட்டார்களெனவும், வட பகுதியில் வாழும் மக்களின் அன்றாடச் சிக்கல்களையே ஆராய்வர் எனவும் விடுதலைப் புலிகள் அரச பிரதிநிதிகள் குழு யாழ்ப்பாணத்திற்குச் செல்ல முன்னரே தெரிவித்திருந்தனர். தமிழ் மக்களின் நல்லெண்ணத்தைப் பெறுவதிலேயே கண்ணாக இருந்த அரசுக்கு அந்த நேரத்தில் இந்த யோசனை மிகவும்

ஏற்புடையதாகவிருந்தது. முதலாம் கட்டப் பேச்சுவார்த்தை யின்போது, இரு பகுதியினரும் ஏற்றுக்கொண்ட நிகழ்ச்சி நிரல் போரினால் களைப்புற்றிருந்த வடக்குக் கிழக்கில் வாழும் தமிழ் மக்களுக்கு மனநிறைவைக் கொடுத்தது. இதன் காரண மாக அதைத் தொடர்ந்து வந்த சனாதிபதித் தேர்தல்ல் முன்னெப்போதுமில்லாதவாறு அதிகப்படியான தமிழ் மக் களின் வாக்குகளைத் திருமதி சந்திரிகா அவர்களால் பெற முடிந்தது. திரு. காமினி திசநாயக்கா அவர்களின் கொலைக் குப்பின், இரண்டாம் கட்டப் பேச்சுவார்த்தையை அரசு ஒத்தி வைத்திருந்தும் நிகழ்ச்சி நிரலில் உள்ளடக்கியுள்ள விடயங்களை நடைமுறைப்படுத்துவதில் தாங்கள் உறுதியாகவிருப்பதாக விடு தலைப் புலிகள் தமிழ் மக்களுக்குக் கூறிவந்தனர். ஆனால் அரசு இந்த விடயம் பற்றி எதையும் வெளிப்படையாகக் கூறாதது, அது இந்த நிகழ்ச்சி நிரலைப் புறக்கணித்துவிட்டு, புதிய விடயங்களைக்கொண்ட நிகழ்ச்சி நிரல் ஒன்றைத் தயாரிக்க விரும்புவதைக் காட்டுவதாக இருந்தது. இருப்பினும், இனச் சிக் கலுக்கான தீர்வை எட்டுவதற்கு ஏதுவாக, இந்த யுத்தம் தோன்றியதற்கான அடிப்படைக் காரணங்களைக் கண்டறிய வேண்டுமெனக் கூறும் கடிதமொன்றைப் பிரதிப் பாதுகாப்பு மந்திரி அவர்கள் திரு. வே. பிரபாகரன் அவர்களுக்கு டிசம்பர் மாதம் 20 ஆம் நாளன்று அனுப்பியதாகக் கலாநிதி அன்ரன் பாலசிங்கம் அவர்கள் டிசம்பர் மாதம் 22 ஆம் நாளன்று ''புலிகளின் குரல்'' வானொலியில் பேசும்போது கூறினார்.

கலாநிதி பாலசிங்கம் அவர்கள் கூறுவது உண்மையானால் இரு பகுதியினரும் ஏற்றுக்கொண்ட பொதுவான நிகழ்ச்சி நிரலை அரசு புறந்தள்ளிவிடத் தீர்மானித்திருக்கிறது எனக் கருத வேண்டியுள்ளது. போரினால் தமிழ் மக்களுக்கு ஏற்பட்ட இன் னல்களைத் தீர்ப்பதாகக் கூறி அவர்களின் வாக்குகளைச் சனாதி பதித் தேர்தலில் பெற்ற மக்கள் முன்னணியின் தலைமைப் பீடம் இனப்பிரச்சினைக்கான அடிப்படைக் காரணங்களைப் பேச்சுவார்த்தைமூலம் கண்டறியவேண்டும் என்னும் தனது நேரத்திற்கேற்ற அதிருப்தியான முயற்சியால் வடக்கிலுள்ள வர்களை மீண்டும் போரின் அவலத் தன்மைக்குத் தள்ளி இப் போது கண்டிக்க விரும்புகிறது என்றே கருதவேண்டியுள்ளது.

## பாலசிங்கம் அவர்களின் பேச்சு

பிரதிப் பாதுகாப்பு மந்திரியின் கடிதத்திலிருந்த இந்தவிட யத்தை வட பகுதியில் உள்ள மக்களுக்குத் திரு. பாலசிங்கம் அவர்கள் எடுத்துக் கூறிப் பன்னிரெண்டு நாட்கள் கடந்தபோதி

லும் அரசு அதை இன்னமும் மறுக்கவில்லை. இன மோதலுக்கான அடிப்படைக் காரணங்களை ஆராயுமுன்னர், அது மக்களுக்குத் தோற்றுவித்த துன்பங்களுக்குத் தீர்வு காண்பது அவசியமானது. யுத்த நிறுத்தமொன்றுக்கு விடுதலைப் புலிகள் எப்பொழுதும் தயாராகவுள்ளனர். அரசு எந்த நேரத்திலும் பேச்சுவார்த்தைகளுக்கு வரலாம். ஆனால் எல்லாவற்றிற்கும் முதலில் மக்கள் நாளாந்தம் எதிர்கொள்ளும் பிரச்சனைகள் தீர்க்கப்படவேண்டும். என மந்திரியின், கடிதத்திற்கு திரு. வே பிரபாகரன் அவர்கள் டிசம்பர் மாதம் 22 ஆம் நாள் பதில் அனுப்பியுள்ளதாகவும் திரு பாலசிங்கம் அவர்கள் தெரிவித்தார். (திரு. பாலசிங்கம் அவர்களின் பேச்சு ஒலிபரப்பப்பட்ட அன்று)

மக்கள் பாதுகாப்பாகப் பயணத்தை மேற்கொள்ளத்தக்க வகையில் பாதை ஒன்றைத் திறந்துவிடுவதற்குப் படையினரின் இசைவை அரசால் பெற முடியவில்லை. மக்கள் எதிர்கொள்ளும் அன்றாடச் சிக்கல்களைத் தீர்த்துவைக்க முடியவில்லை. இப்படியான ஒரு அரசால் இனச் சிக்கலைத் தீர்த்து வைக்க முடியுமென எப்படி நம்புவது எனக் கடிதங்கள் பரிமாறிக் கொண்டது பற்றிக் கூறும்போது திரு. பாலசிங்கம் அவர்கள் கேள்வி எழுப்பினார். டிசம்பர் மாதம் 22ஆம் நாள் திரு. வே. பிரபாகரன் அவர்கள் எழுதிய பதில் கடிதத்தை நன்கு ஆராய்ந்த பின்னரே, புத்தாண்டுக்கு முன் பேச்சுவார்த்தைகள் மீண்டும் தொடங்குமெனப் பிரதிப் பாதுகாப்பு மந்திரி அறிவித்தார் போல் தோன்றுகிறது.

திரு. பாலசிங்கம் அவர்கள் கூறுவது உண்மையானால், பிரதிப் பாதுகாப்பு மந்திரி டிசம்பர் மாதம் 20 ஆம் நாள் எழுதிய கடிதத்தில் குறிப்பிட்டிருந்த புதிய நிகழ்ச்சி நிரலை விடுதலைப் புலிகள் முட்டாள்த்தனமாக ஏற்றுக்கொள்வார்கள் என அரசு ஊகித்திருந்தது என்பது தெளிவாகத் தெரிகின்றது. 10 ஆண்டுகளுக்கு மேலாக நடைபெற்றுவரும் போரின் பின்னரும் உயர்மட்டத்தில் காணப்படும் இந்தச் சூதறியாத் தன்மை நம்பமுடியாது திகைக்க வைக்கிறது.

சந்திரிகா நிர்வாகத்தின் நேர்மையான அரசியல் பற்றித் தமிழ் மக்கள் கொண்ட நம்பிக்கை தவறானது என்பதை அவர்களுக்கு உணர்த்தத் திரு. வே. பிரபாகரன் அவர்களுக்கும் திரு. பாலசிங்கம் அவர்களுக்கும் இது நல்ல வாய்ப்பை அளித்தது. இந்த விடயத்தை மக்களுக்குத் தெளிவுபடுத்தும் நோக்கில் திரு. பாலசிங்கம் அவர்களும், திரு. சு ப. தமிழ்ச்செல்வன் அவர்களும், பத்திரிகையாளர் மாநாடு ஒன்றை டிசம்பர் மாதம் 22ஆம்

நாள் அன்று யார்ழ்ப்பாணத்தில் கூட்டினார்கள். முதலாம் சுற்றுப் பேச்சுவார்த்தையின்போது இருபகுதியினரும் இணங்கிக் கொண்ட நிகழ்ச்சி நிரலை அடிப்படையாக வைத்துப் பேச்சுவார்த்தையைத் தொடர வேண்டுமென்ற விடுதலைப் புலிகள் நிலைப்பாட்டை அரசு ஏற்றுக்கொள்ளப் பின் நிற்கின்றது எனத் திரு. பாலசிங்கம் அவர்கள் அங்கு குறிப்பிட்டிருந்தார். அவர் அப்படிக் குறிப்பிடுவதற்குப் போதியளவு காரணங்கள் இருந்தன.

திருமதி சந்திரிகா அவர்கள் இனச்சிக்கலைத் தீர்க்கும் விடயத்தில் ஆரம்பத்தில் காட்டிய அக்கறையை இப்பொழுது காட்டாது இருக்கிறார். அவ்வாறு இருந்தும் அமைதியை எட்டுவதற்காகவும் தமிழ் மக்கள் எதிர்கொள்ளும் அன்றாடச் சிக்கல்களைத் தீர்ப்பதற்காகவும் சென்ற மூன்று மாதத்திற்குள் ஒன்பது கடிதங்களைத் திரு.வே. பிரபாகரன் அவர்கள் அரசுக்கு அனுப்பி வைத்ததாக திரு. பாலசிங்கம் அவர்கள் குறிப்பிட்டிருந்தார். மக்கள் எதிர்கொள்ளும் அன்றாடச் சிக்கல்களைத் தீர்ப்பதற்கான வழிவகைகளை ஆராயுமாறு திருமதி சந்திரிகா அவர்கள் தங்களுக்குப் பணித்ததாக முதலாம் கட்டப் பேச்சுவார்த்தையை ஆரம்பித்துவைத்தபோது திரு. பலபத்தபெண்டி அவர்கள் கூறியதையும் அவர் சுட்டிக்காட்டியிருந்தார். திரு. டி. பி. வியதுங்கா அவர்களின் பேரினவாதப் போக்கின் காரணமாக ஐக்கிய தேசியக் கட்சி அரசு இழந்த தமிழ் மக்களின் நல்லெண்ணத்தைச் சந்திரிகாவின் அரசு பெற்றது. எவராலும் வெல்ல முடியாதவர்கள் என்ற புகழை விடுதலைப் புலிகளுக்கு இரண்டாம் ஈழப் போர் தேடிக் கொடுத்தது. ஆகவே அரசியல் மற்றும் இராணுவ ரீதியான அமைதி நிலையை ஏற்படுத்த இந்த நல்லெண்ணம் உதவுமானால், அது மக்கள் முன்னணி அரசுக்கு பெரும் நன்மை பயப்பதாகவிருக்கும். ஆனால் ஒவ்வொரு நாட்களும் செல்லச் செல்லப் படை ரீதியாகத் தீர்க்கமுடியாது போய்க் கொண்டிருக்கும் இனச்சிக்கலில், அரசியல்ரீதியிலும் குளறுபடியாகவே அரசு சென்றுகொண்டிருக்கின்றது என்பது தெளிவாகும்.

விடுதலைப் புலிகள் ஏமாற்றியதால் தன்னால் அமைதியை எட்ட முடியவில்லை என அரசு இப்போது கூறமுடியாது. இரண்டாம் ஈழப்போர் தொடங்கியபோது, விடுதலைப் புலிகள் ஏமாற்றிவிட்டதாகவே முன்னைய அரசு கூறியிருந்தது. 1989 ஆம் ஆண்டில் பிரேமதாசா அவர்களின் அரசுடன் பேச்சுவார்த்தையை நடாத்தத் தொடங்கியவுடனேயே விடுதலைப்

புலிகள் தங்கள் நிலைப்பாட்டைத் தெளிவாகத் தெரியப்படுத்தியிருந்தனர். இது தொடர்பாக அவர்கள் வெளியிட்டிருந்த கைநூல் ஒன்று பற்றிக் கொழும்பில் இருந்த எவரும் அக்கறை கொள்ளவில்லை.

அமைதியை எட்டுவதற்கான நடவடிக்கையை அரசு மேற்கொள்ளத் தொடங்கிய நாளிலிருந்தே விடுதலைப்புலிகள் தங்கள் நிலைப்பாட்டை தெளிவுபடுத்தி வந்துள்ளனர். திரு. வே. பிரபாகரன் அவர்கள் மாவீரர் தினத்தன்று, அதாவது நவம்பர் மாதம் 27 ஆம் நாளன்று ஆற்றிய உரை இதற்கு நல்ல சான்று பகர்கின்றது. விடுதலைப் புலிகள் இரக்கமற்றவர்களாவும், தந்திரசாலிகளாகவும் இருந்தபோதிலும் அவர்கள் கொண்ட இலட்சியத்தில் தளராதவர்கள். இதை எடுத்துக் காடடுவதற்காக ஒக்ரோபர் மாதத்தில் இருந்து அவர்கள் வெளியிட்ட அறிக்கைகளையும் கருத்துக்களையும் உங்கள் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகின்றேன்.

''உங்களுக்குப் புகலிடமோ பாதுகாப்போ தந்த ஒருநாட்டில் நீங்கள் விருந்தாளியாக மாத்திரமே இருக்கின்றீர்கள். வெளிநாடு ஒன்றின் குடிமகனாக வரும் வாய்ப்பைப் பெற்றாலும் கூட, நீங்கள் அந்த நாட்டின் உண்மையான குடிமகனாக இருக்க முடியாது. எங்கள் சொந்த மண்ணில் எங்களுக்கென ஒரு நாடு உருவாகிக் கொண்டிருக்கின்றது. அதில் நீயும் ஒருவரென உறுதிப்படுத்தினால் மாத்திரமே நீயும் அந்த நாட்டின் குடிமகனாக வரமுடியும். சமாதானப் பேச்சுவார்த்தைகளில் ஈடுபட்டுக் கொண்டிருக்கும் அதேவேளையிலும் நாங்கள் ஒரு நாட்டவர், ஒரு நாட்டை உருவாக்குவதை நோக்கிச் செல்கின்றோம் என்பதை மறக்கக்கூடாது.

பாரிஸ் நகரில் 1994ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் 23ஆம் நாளன்று நடைபெற்ற ''போரும் அமைதியும்'' என்ற விடயம் பற்றிய கருத்தரங்கின் போது, நடைபெற்ற பொதுக் கூட்டத்தில் விடுதலைப் புலிகளின் மத்திய குழுவின் உறுப்பினரான லோறன்ஸ் திலகர் அவர்கள் இவ்வாறு கூறியிருந்தார். யாழ்ப்பாணக் கத்தோலிக்க மேற்றிராசனப் பிரிவைச் சேர்ந்த அருட்தந்தை எஸ். ஜே. இம்மானுவேல் (S. J. Emmanuel) போராசிரியர் பீற்றர் சால்க் (Prof. Peter Schalk) மற்றும் டாய்றர் மாக் கொன்னல் (DIERURE MC CONNELL) ஆகியோரும் இக் கருத்தரங்கில் கலந்துகொண்டு உரையாற்றினர்.

திருமதி. சந்திரிக்கா அவர்களின் வெற்றியை அமைதியைக் காண்பதற்காக அளிக்கப்பட்ட வாக்குகள் எனக் கூறலாம். அதேவேளை இதில் உண்மையிருந்தபோதிலும் வேறு அம்சங்களும் அவருடைய வெற்றிக்குக் காரணமாக இருந்திருக்கலாம். சென்ற நாற்பது ஆண்டு காலப்பகுதியில் தேசியச் சிக்கல்களின் தீர்வுக்கு முன்னுரிமை கொடுத்த சிங்களத் தலைவர் ஒருவர் உண்டானால் திருமதி. சந்திரிகா அவர்கள் மாத்திரமே எனத் தமிழ் மக்கள் கருதிபிருக்கலாம். ஆனால் நாட்டின் நிலையில் வேறு சிலவும் அவரைக் கட்டாயப்படுத்தியிருக்கலாம். யுத்தமுனையில் படையினர் சந்தித்து வரும் தொடர்ச்சியான பின்னடைவும், பேரழிவுகளும் அதற்கான காரணங்களில் ஒன்றாக இருக்கலாம். தமிழர்களுக்கென ஒரு நிர்வாகக் கட்டமைப்பு புலிகளினால் உருவாக்கப்பட்டதும் அதற்கான இன்னொரு காரணமாகவிருக்கலாம். இதை இந்தக் கோணத்தில் ஆராயும்போது இனச் சிக்கலின் தீர்வுக்கு முன்னுரிமை கொடுத்ததற்கான பெருமை திருமதி சந்திரிகா அவர்களைவிட விடுதலைப் புலிகளுக்கே உரித்தானதாகும். இப்படியே தமிழ் மக்களும் கருதுகின்றார்கள். அரச படையினரின் மேலாண்மை மேலோங்கியிருக்கும் என்று கருதியிருந்த ஜெயவர்த்தனா, பிரேமதாச மற்றும் தனது அவதானத்துக்கு அப்பால் எதுவும் தெரியாதிருந்த விஜயதுங்கா போன்றோர் போலன்றி, விடுதலைப் புலிகளுடன் பேச்சுவார்த்தை நடாத்துவதன் மூலம் மாத்திரமே இனச் சிக்கலுக்குத் தீர்வை எட்ட முடியுமென்பதை திருமதி சந்திரிகா அவர்கள் உணர்ந்திருந்தார். அதற்காக அவர் பாராட்டப்பட வேண்டியவரேயாவர்.

ஆனால் திருமதி. சந்திரிகா அவர்கள் குமாரத்துங்கா மாத்திரமாகவன்றி பண்டாரநாயக்காவாகவும் விளங்குகின்றார். என்பதை மறந்துவிடக் கூடாது. ''சிங்களம் மாத்திரம்'' என்ற சட்டத்தைக் கொண்டு வந்தவரும், தமிழ் மக்களுக்கு எதிராக 1958 ஆம் ஆண்டில் வன்செயல்கள் கட்டவிழ்த்து விடப்பட்ட போது, வடக்கு மற்றும் கிழக்குப் பகுதிகளுக்கு முதன் முறையாகப் படையினரை அனுப்பியவரும் திரு. எஸ். டபிள்யு. ஆர். டி. பண்டாரநாயக்கா அவர்களாவர். சமஷ்டிக் கட்சியின் சத்தியாக்கிரகப் போரைக் காவல்துறையினரினதும், படையினரினதும் உதவியுடன் அடக்கிய பின்னர் வடக்கு மற்றும் கிழக்குப் பகுதிகளுக்குப் படையினரை இரண்டாம் முறையாக அனுப்பியவர் திருமதி ஸ்ரீமாவோ பண்டாரநாயக்கா அவர்களாவர். இவைகளெல்லாம்தான் இனங்களிடையே பாட்ட நிலை தோன்றவும் படிப்படியாகப் போருக்கும் கொண்டு வந்தன. ஆகவே இவ

ருடைய பெற்றோர் விட்டுச்சென்ற களங்கத்தை நீக்க வேண்டிய பணி சந்திரிக்கா அவர்களுடையதாகும்.

தாங்கள்படும் இன்னல்கள் தீரும் எனக் கருதியே திருமதி சந்திரிகா அவர்களுக்குச் சிங்கள மக்களில் பெரும்பாலானோர் தங்கள் வாக்குகளை அளித்தார்கள். எந்தவொரு அரசியல் கட்சியையும் பழிவாங்குவதில் சிங்கள மக்கள் கைதேர்ந்தவர்கள். 1970 ஆம், 1977 ஆம் ஆண்டுகளில் தங்கள் பழியைத் தீர்த்துக் கொண்ட அவர்கள் ஐக்கிய தேசியக் கட்சியின் 17 ஆண்டுகால ஊழல் நிறைந்த அரசை 1994 ஆம் ஆண்டில் பழிதீர்த்துக் கொண்டார்கள். 11 ஆண்டுகளாக நடைபெறும் முடிவு பெறாத யுத்தம் காரணமாக நலிவுற்றிருக்கும் அவர்கள் ஆயிரக்கணக்கான படையினரின் உடல்கள் பைகளில் கொண்டு வரப்படுவதையும், அரசுக்கும் மக்கள் விடுதலை முன்னணிக்குமிடையிலான கொலை வேட்டைகளின்போது களனி கங்கையிலும், மகாவலி கங்கையிலும் மிதந்து வந்த சடலங்களைக் கண்டும் வேதனையும் சினமுமுற்றனர். இருப்பினும் பேச்சுவார்த்தைமூலம் நீடித்து நிலைத்திருக்கக் கூடிய அமைதி எட்டப்படுவதற்கு இசைவாக எத்தனை சிங்கள மக்கள் வாக்களித்தார்களோ தெரியவில்லை.

யுத்தச் செலவீனங்களை மேலும் தாங்கிக் கொள்ள முடியாத நிலையை உணரும் அரசுக்கு அமைதி கட்டாயமாகத் தேவைப்படுகின்றது. குறைந்த நிலையில் இருக்கும் திறைசேரிப் பிரிவிலிருந்து 15-20 மில்லியன் ரூபாய்களை யுத்தத்திற்காகச் செலவிடுவது அதற்கு இலகுவான காரியமல்ல. போர் மறைமுகமாக ஏற்படுத்தும் செலவீனம் எவ்வளவு? வெளிநாட்டு மூலதனம், சுற்றுலாத்துறை ஆகியவற்றிற்கு ஏற்படும் பொருண்மியப் பாதிப்புக்கள், மீன்பிடித்துறை, விவசாயம், மற்றும் கைத்தொழிற் துறையில் ஏற்படும் பாதிப்புகள் என்பன வேறாகும். சுருங்கக் கூறின் அரசு தனது நலத்திற்காக இந்த யுத்தத்தை முடிவுக்குக் கொண்டுவரவேண்டியுள்ளது.

பாராளுமன்ற வழிமுறைகளாலும் அமைதியான வழிகளாலும் முன்னைய தமிழ்த் தலைவர்களினால் பெறமுடியாதிருந்ததைத் தங்களது அளப்பரிய அர்ப்பணிப்புகள் மூலமும் தாங்கள் காட்டிய எதிர்ப்பு, உறுதிப்பாடு மற்றும் பேராற்றல் மூலமும் விடுதலைப் புலிகளால் பெற முடிந்தது. இதன் விளைவாகத் தமிழ் மக்களுக்கு எனத் தன்னாட்சியுடைய கட்டமைப்புகளும், தமிழ்மக்கள் தங்களில் தங்கியிருக்கக் கூடி

யவாறு பொருண்மியக் கட்டமைப்புகளும் அவர்களினால் ஏற்கனவே உருவாக்கப்பட்டிருக்கிறது.

அரசியல் பேச்சுவார்த்தைகள்மூலம் சனாதிபதி சந்திரிகா அவர்கள் முன்வைக்கும் எந்தவொரு தீர்வுத் திட்டமும் அதாவது சிங்களப் பத்திரிகையாளர் விக்டர்ஐவான் குறிப்பிட்டது போன்று புலிகள் யுத்தத்தின் மூலம் பெற்றுக் கொண்ட உரிமைகள் அனைத்தையும் உள்ளடக்கியதாக இருக்கவேண்டும். அதற்குக் குறைவான எதையும் ஏற்றுக்கொள்வதானால் அது தமிழ் மக்கள் அமைதியுடனும், மானத்துடனும், மதிப்புடனும் வாழ்வதற்காகத் தங்கள் இன்னுயிர்களை ஈந்த வீரத்தியாகிகளுக்குத் துரோகம் செய்வதாகும்.

(விடுதலைப் புலிகளின் உத்தியோக பூர்வ ஆங்கில வெளியீடான நவம்பர் மாத ''பத்திரிகையான''முதல் பக்கத்தில் எழுதப்பட்ட ஓர் விளக்கக் குறிப்பு)

''அரசபடையினர் யுத்தநிறுத்தத்தை மீறாது கடைப்பிடிப்பார்கள்'' என அரசு உறுதியளித்தால் மாத்திரமே விடுதலைப் புலிகள் யுத்த நிறுத்தத்திற்குத் தயாராகவிருப்பதாக அரசுக்குப் பதிலளித்ததன் மூலம் தமிழ் மக்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்கான தங்கள் கடப்பாட்டை விடுதலைப் புலிகள் வெளிக்காட்டியுள்ளனர்.

தமிழீழத்தில் உண்மையான அரசாக விளங்கும் விடுதலைப் புலிகள் தங்கள் மக்களின் நலன்களைக் கருத்தில் கொண்டு அரசுடன் பேச்சுவார்த்தை நடாத்த வேண்டும். அதில் பொருண்மியத் தடையை நீக்குமாறும், யுத்த நிறுத்தத்தைக் கொண்டு வருமாறும், மக்கள் பாதுகாப்பாகப் பயணத்தை மேற் கொள்ளத்தக்க வகையில் பூநகரிப் படைத்தளத்தை அகற்றுமாறும் வற்புறுத்தி வரவேண்டும். இப்படிச் செய்வதன் மூலம் தமிழீழத்தில் வாழும் மக்களின் உண்மையான அரசு தாங்கள்தான் என்பதை விடுதலைப் புலிகள் உலகத்திற்குத் தெரியப்படுத்த வேண்டும்.

— தாரகி

(காலச்சுவடு – ஒக்டோபர் 1991)

# தமிழ்ப் படைப்புலகம் இன்றும் நாளையும்

நாளைய படைப்புலகம் தமிழில் எப்படி இருக்கும் என்ற கேள்வி சுவாரஸ்யமானது. வறட்டு யதார்த்தம் இயக்கத்தின் வலுவைச் சார்ந்து உயிர் வாழ்ந்து கொண்டிருக்கிறது. இவர்களின் கூட்டுக் கத்தல்களை ரகசியமாக மறுத்துக் கொண்டிருக்கின்றன வாசக அனுபவங்கள். தட்டை எழுத்து அது தோன்றிய காலத்தில் இயக்கம் சார்ந்து வலுவாக நிற்பது போன்ற பிரமிப்பைத் தந்து காலப்போக்கில் வாசக அனுபவத்தின் சூட்சும வலுவால் பின்னகர்த்தப்படுகிறது. வாழ்பவையும் வாழத் துடிப்பவையும்தான் இலக்கியமாக இருக்க முடியும்.

கலைகள் பற்றி இலக்கியங்கள் பற்றி விளக்க நேரும்போது அந்தத் துறைகளுக்கே உரித்தான பல கலைச்சொற்களைப் பயன்படுத்துகின்றோம். அறிவு சார்ந்த தெளிவு உறுதி பெற்ற நிலையில் சிலகுணங்கள் சார்ந்து கலைச் சொற்கள் உருவாகி வருகின்றன. அவற்றைப் பயன்படுத்தாமல் அடியைப் பிடித்து விவரித்துக் கொண்டிருந்தோம் எனில் கருத்துலகில் குறிக்கோளைச் சென்றடைவது முடிவற்ற காரியமாகிவிடும். அறிந்தவற்றைத் தாண்டி அறியாதவற்றுக்கு விரைய கலைச் சொற்கள் உதவுகின்றன. சுருங்கச் சொல்லி விளங்க வைக்கப் பயன்படும் கலைச் சொற்கள் கருத்துப் பரிமாற்றத்தைத் துரிதப் படுத்துகின்றன.

இலக்கியத் துறையில் நாம் இன்று பயன்படுத்தும் கலைச் சொற்கள் அதிகமும் மேற்கத்தய உலகின் சிந்தனை ஆய்வுகளில்

இருந்து உருவாகி வந்தவை. நமது இலக்கியங்களிலிருந்து நாம் அனுபவம் பெறவில்லையா? நமக்கும் நீண்ட இலக்கிய மரபு இல்லையா? அவற்றில் சில படைப்புகளேனும் உலகப் படைப்புகளுக்கு நிகரானவை என்று தமிழ் விமர்சகர்கள் கூறியதில்லையா? நமது இலக்கியங்களிலிருந்து அனுபவம் பெற்று அவ்வனுபவத்தின் சாரங்களைக் கண்டறிந்து நமது கலைச்சொற்களை உருவாக்க நமக்கு என்ன தடை?

கலைச்சொற்களை நாம் உருவாக்கவில்லை என்ற கவனமே இப்போது இல்லை. மேற்கத்தைய கலைச்சொற்கள் ஒன்றுவிடாமல் மொழிபெயர்க்க வேண்டும். அவற்றை மொழிபெயர்க்கும் போது தூயதமிழில் மொழிபெயர்க்கவேண்டும். இந்த இரண்டு கவனங்கள்தான் நமக்கு இருக்கின்றன. வாழ்க்கை நிலையிலிருந்து இலக்கியத்தைப் பிரிக்க முடியாது. இலக்கியத்தின் சாரங்களில் இருந்து மேலெழுந்து வருபவை கலைச்சொற்கள். அப்படியென்றால் ஒரு கலைச்சொல்லை தனிக் குணங்கள் கொண்ட ஒரு வாழ்க்கையிலிருந்து வெளிப்பட்டது என்று சொல்லலாம். எந்த வாழ்க்கை கலைச்சொல்லை உருவாக்கிற்றோ அந்த வாழ்க்கை நமக்கு அந்நியமானது எனில் அந்தக் கலைச்சொல்லும் நமக்கு அந்நியமானதுதானே? இதுபற்றியும் நாம் யோசித்தது கிடையாது.

மேற்கத்திய கலைச்சொற்கள் விரவி நேற்றையக் கவிதை இலக்கியத்தை ஆராயும்போது இலக்கிய விமர்சனத்தின் மிக உறுதியான அடிப்படைகளை உருவாக்குகிறோம் என்று மனப்பால் குடிக்கிறோம். இது பொய்யான கற்பனை. இந்தக் கற்பனையை உருவாக்கியவர்களும், அதில் தங்கி நிற்பவர்களும், அதைத் தங்கள் உத்தியோக வெற்றியாக மாற்றியிருப்பவர்களும் அதிகமும் கல்லூரி ஆசிரியர்கள்தான். விமர்சனத்தில் நாட்டம் கொண்ட படைப்பாளிகளுக்கு இதில் பங்குகிடையாது.

விமர்சனம் ஓங்க படைப்பிலிருந்து பெறும் அனுபவம் முக்கியமானது. சுய அனுபவத்தின் சாரத்திலிருந்துதான் நுட்பமான கலைச்சொற்கள் உருவாகிவரும். ஆனால் நாம் நமது இலக்கியத்திலிருந்து பெறவேண்டிய இயற்கையான அனுபவத்திற்குக் குந்தகமாக நிற்கிறது. மேற்கத்திய கலைச்சொற்கள் சார்ந்த பார்வை. மற்றொரு வாழ்க்கையின் ஊடாக நம்முடைய வாழ்க்கையை நாம் பார்த்தோம் என்றால் அந்தப் பார்வையில் எப்படித் தெளிவு கூடும்?

நம் திறனாய்வுகளை ஆங்கில அறிவு சார்ந்த திறனாய்வுகள் என்றும் அனுபவத்திற்கு அழுத்தம் தரும் திறனாய்

வுகள் என்றும் இரண்டாகப் பிரிக்கலாம். இவற்றில் அனுபவத்திற்கு அழுத்தம் தரும் திறனாய்வுதான் படைப்புகளை அவை வெளிவந்த காலங்களில் இனங்கண்டு முக்கியமான படைப்புகளை வாசகர்களின் கவனத்திற்குக் கொண்டு வந்திருக்கிறது. படைப்பிலிருந்து சுய அனுபவம் பெறுபவர்களின் எண்ணிக்கை குறைந்துபோன நிலையில் இவ் விமர்சனங்களின் அளவும் குறைந்துபோனதில் வியப்பில்லை. சுய அனுபவம் பெறாத நிலையில் நிகழ்த்தப்படும் ஒப்பியல் விமர்சனங்களும் புதிய கண்டு பிடிப்புகளுக்கு இட்டுச்செல்லாது. வாழ்க்கையையோ, கலாச்சார நிலையையோ படைப்பாளியின் பின்னணியையோ கணக்கெடுத்துக் கொள்ளாமல் ஒப்பியல்கள் செய்யப்படுகின்றன. ஒப்பியல் இலக்கியம் என்பது அனுபவமோ, பார்வையோ இல்லாத நிலையிலும் சொற்களை விவரிப்புத் தளத்தில் பெருக்கி உள்ளீடற்ற பக்கங்ளை ஆராய்ச்சியாகக் காட்டும் தந்திரமாகவே முடிந்திருக்கிறது. ஒப்பியல் இலக்கிய ஆராய்ச்சி உருவாக்கப்பட்டதின் நோக்கங்களும் அடிப்படைகளும் மேலானவையாக இருக்கலாம். இவைபற்றி எனக்குத் தெரியவில்லை. சுய அனுபவம் பெற முடியாதவர்களுக்கும் நம் வாழ்கையோடு இணைந்து நம் மூல பாடங்களை ஆழ்ந்தறிய திறனற்றவர்களுக்கும் ஆராய்ச்சிப் பட்டங்கள் பெற அனுசரிக்கப்படும் குறுக்கு வழியாகத்தான் அது தமிழில் முடிந்திருக்கிறது என்பதற்கு நிறைய உதாரணங்கள் இருக்கின்றன. பட்டங்களைப் பெற்றுத் தரும் கல்லூரி ஆராய்ச்சிகள் அநேகம் புத்தக வடிவம் பெறுவதில்லை. அவை வெளியாகி ஒரு நுட்பமான விமர்சன மனம் அவற்றைப் பரிசீலனை செய்யவும் நேர்ந்தால் ஆராய்ச்சித் துறை சார்ந்த செயல்பாட்டின் அவலம் அப்போது தெரியவரும்.

தமிழில் படைப்பைப் பற்றிப் பேசும்போது மூலபாடத்தைக் கவனிக்கும் வாய்ப்பு மட்டுமே நமக்கு இருக்கிறது. நேற்றைய படைப்பாளிகளின் வாழ்க்கை பற்றிய குறிப்புகள்கூட நம்மிடம் இல்லை. இன்றைய படைப்பாளிகளின் வரலாறுகளும் மிக அரிதாகவே உள்ளன. இன்றைய படைப்பாளி தன் படைப்புக்களை உருவாக்க நேர்ந்த முகாந்திரங்கள் பற்றிய பதிவுகளும் இல்லை. படைப்பைச் சரியாகப் புரிந்துகொள்ள உதவும் விமர்சனங்கள், படைபபைத் தவறாகப் புரிந்து கொள்ள உதவும் எழுத்துகளின் அளவுக்குக்கூட இல்லை. மூல பாடங்களை நுட்பமாக, சுய கற்பனைகளை ஒதுக்கிவிட்டுப் பார்க்கும் ஒழுக்கம் நம்மிடம் இருக்கிறதா? மாணவர்களுக்கு இவ்வொழுக்கத்தைக் கற்றுத் தருவது ஒரு விதத்தில் அவர்

களை வாழ்க்கையோடு இறுகப் பிணைக்கும் காரியம் என்பதை நம் ஆசிரியர்கள் உணர்ந்திருக்கிறார்களா? எழுத்தை ஊடுருவி ஆராய்வது என்பது நவீன வாழ்க்கையைப் புரிந்து கொள்ள மிகத் தேவையான ஒரு ஒழுக்கம். பொதுவாக நாம் வளர்த்துக் கொண்டுவரும் மனோபாவம் மூலத்தை அசட்டையாவே பார்க்க வைக்கிறது. படைப்புகள் சார்ந்து நம் கற்பனையைப் படரவிட்டு விளக்கங்களை விரிப்பது புலமை சார்ந்த திறனாகவே தமிழில் அடையாளம் காணப்படுகிறது.

இவ்வளவு பின்னணிகளும் ஒரு இளம் படைப்பாளி தொழில்படும் சூழலுக்கு எதிரானவை. இன்றைய இளம் படைப்பாளி தான் செய்ய வேண்டிய காரியம் பற்றி தெளிவில்லாமல் இருப்பது மொத்தச் சமூகத்திலும் ஊடுருவியிருக்கும் தெளிவின்மையின் குறியீடாகவே இருக்கிறது. ஆனால் ஏதும் புதுமை செய்யவேண்டும் என்ற துடிப்பு அவனுக்கு இருக்கிறதே. அது வரவேற்க வேண்டிய விடயம் ஆனால் அந்தப் புதுமை எங்கிருந்து வரும்? இறக்குமதி அறிவுகளிலிருு நம் வாழ்வோடு இணையும் புதுமை வருமா? நம் இலக்கியங்களிலிருந்து இளம் படைப்பாளி சுய அனுபவங்களைப் பெறவில்லை என்றால் வாழ்க்கையைப் புரிந்து கொள்ளும் அவன் முயற்சியில் நிரப்பப்படாத இடைவெளிகள் இருக்கின்றன என்று தான் அர்த்தம். யதார்த்தத்தின் மீது பிடிப்பு இல்லாத ஒரு மனம் எப்படி படைப்பை நிகழ்த்த முடியும்? ஆழ்ந்த புரிதல் மூலமும் மறுபரிசீலனை மூலமும் வெளிப்படுவது புதிய விமர்சனம். புதிய விமர்சனம் தரும் பார்வைதான் புதிய படைப்புகளை உருவாக்குகிறது.

இருப்பைச் சார்ந்த பிரச்சினைகளை ஒற்றைப் பரிமாணத்தில் பிரதிபலித்து படைப்பை உருவாக்க முடியாது. படைப்பில் ஒன்றைச் சொல்லும்போது சொல்லப்படாதவற்றின் அதிர்வுகளும் அதில் இருக்கின்றன. வாழ்க்கையின் முழுமையை உணர்வதற்கான தேடலில் நின்று பகுதிகளைக் கூறும்போது கூட இந்த அதிர்வுகள் உருவாகின்றன. இன்றைய பெரும்பான்மையான எழுத்துக்கள் பொறிகளில் விழும் கோலங்களில் பிரச்சனைகளைத் திணித்துக் கொண்டிருக்கின்றன. பிரச்சினைகளின் சமூக முக்கியத்துவம் பிரதிபலிப்புக்களைப் படைப்பாக்கிவிடும் என்பது அவற்றை உருவாக்குகிறவர்களின் எதிர்பார்ப்பு. இந்த எதிர்பார்ப்பைத் பூர்த்தி செய்துதர ஏதாவது ஒரு இயக்கம் சார்ந்த உறவுகளையே அவர்கள் நம்பிக் கொண்டிருக்கிறார்கள். நானும் என்னைச்சுற்றியிருப்பவர்களும் சோகமாக இருக்கிறோம். என்பதை அரற்றிக் கொண்டிருக்

ஒரு படைப்பாளி தேவையில்லை. இந்தப் பிரதிபலிப்பே சாத்தியமாக இருக்கும். எழுத்தாளன் பிரதிபலிப்புகளையே படைப்பின் அடையாளமாக மாற்றித் தன்னைத் தக்கவைத்துக் கொள்ளும் முயற்சியில் தன்னையொத்தவர்களுடன் கைகோர்த்துத் திரளுகிறான். ஆனால் படைப்பு வாழ்கையில் சாரத்தை எதிர்நோக்கும் வாசகனின் ஆமோதிப்பில் அதன் உயிரை வைத்துக் கொண்டிருக்கிறது. தட்டை எழுத்தை இயக்க விசுவாசம் காரணமாகத் தூக்கிப் பிடிக்கும் வாசகன் கூட தட்டை எழுத்தில் அலுப்புத் தாக்க காலப்போக்கில் மனஞ்சுருங்கிப் போகிறான். தான் உருவாக்கும் பொய் தான் எடுத்த வாந்தி போல் அவனுக்குப் படத் தொடங்குகிறது.

இன்றைய வாசகனுக்கு யதார்த்தம் என்ற பெயரில் உருவாகிவரும் தட்டை எழுத்தின் மீது மிகுந்த அலுப்பு ஏற்பட்டுவிட்டது. இந்நிலையில் யதார்த்தம் பற்றிய நம் புரிதலையே நாம் மறுபரிசீலனை செய்ய வேண்டியிருக்கிறது. உண்மையில் நம் வாசகர்களுக்கு யதார்த்தத்தின் மீது அலுப்பா? அல்லது நம் தட்டை எழுத்தாளர்களின் சுவையற்ற, வறண்ட, ஈர்ப்பற்ற, கண்டுபிடிப்புகளற்ற ஆழமற்ற வெற்று விவரணைகளின் மீதுஅலுப்பா?

கலைச்சொற்களின் விளக்கங்கள் எப்போதும் துல்லியமானவை அல்ல. அவை விமர்சகன் தவிர்க்க முடியாத நேரங்களில் கலைச்சொற்களைப் பயன்படுத்தி அச்சொற்களுக்குச் செழுமை சேர்த்துக்கொண்டு போகும்போது தட்டை விமர்சகன் தன் பார்வையற்ற தன்மையையும் சாராம்சம் காண முடியாத நிலையையும் மறைக்க கலைச்சொற்களை அள்ளிப்போட்டு அவற்றை மழுங்கடிக்கிறான். போலி விமர்சனத்தில் கலைச்சொற்கள் இடம் பெறும் அளவுக்கு அசல் விமர்சனத்தில் கலைச்சொற்கள் இடம் பெறுவதில்லை.

யதார்த்தம் என்பது ஸ்தூலத்தின் விபரிப்பு அல்ல. யந்திர ரீதியான படப்பிடிப்பும் அல்ல. படைப்பாளி அறிந்திருப்பவற்றையெல்லாம் மொழியில் கவிழ்ப்பதும் அல்ல. கலை என்பது புற உலகை அக உலகு மோதும் நிலையில் அதன் சாரம்சம் கண்டு அக உலகைச் செழுமைப்படுத்துவதுதான். கலையைப் படைக்கத் தேர்வு மிக முக்கியம். தேர்வுகள் தொகுக்கப்படும் விதமும் முக்கியம். தேர்வுகளை முன்வைக்கும் அடுக்கில் ஒருமை கூட வேண்டுமானால் பார்வை வேண்டும். வாழ்க்கையைச் சுயமாகக் கண்டடைவதிலிருந்து வெளிப்படும் விமர்சனம்தான் பார்வைக்கு வலுவூட்டுகிறது.

இன்றைய வாசக அலுப்பு உண்மையில் யதார்த்தத்தின் மீது அல்ல. தட்டை எழுத்தின் மீதுதான். நம்மை எங்கும் இட்டுச் செல்லாத, நம்மை விரிவுபடுத்தாத பயணத்தின் மீதான வெறுப்பு புற உலகத்தின் சருமத்தின் மீது படிந்து உதிர்ந்து வெறுமையைக் குவிக்கும் சொற்களின் மீதான வெறுப்பு

தமிழில் தட்டை எழுத்துகளின் அவலம் புதிய எதிர் வினைகளை உருவாக்கிவருகிறது. வாழ்க்கையின் சாரத்தை வெற்றுச் சொற்களில் பறிகொடுக்கும் அவலத்திற்கு எதிர்நிலையில் கற்பனைத் திளைப்பில் வாழ்கையைப் பறி கொடுக்கும் எழுத்துக்கள் பரிகாரமாக உருவாகின்றன. சாரத் தைக் குறிக்கோளாகக் கொள்ளாத வறட்டுச் சொற்களும் சாரத்தை ஸ்பரிசிக்கத் தவறும் கற்பனைச் சொற்களும் எதிரும் புதிருமாக நிற்கின்றன. யதார்த்தத்தின் மெய்யான வெற் றியைப் பறைசாற்ற பெரிய படைப்புகளும் வரக்காணோம்.

நாஃஎய படைப்புலகம் தமிழில் எப்படி இருக்கும் என்ற கேள்வி சுவாரஸ்யமானது. வறட்டு யதார்த்தம் இயக்கத்தின் வலுவைச் சார்ந்து உயிர் வாழ்ந்துகொண்டிருக்கிறது. இவர் களின் கூட்டுக்கத்தல்களை ரகசியமாக மறுத்துக் கொண்டிருக் கின்றன வாசக அனுபவங்கள். தட்டை எழுத்து அது தோன் றிய காலத்தில் இயக்கம் சார்ந்து வலுவாக நிற்பது போன்ற பிரமிப்பைத் தந்து காலப்போக்கில் வாசக அனுபவத்தின் சூட்சும வலுவால் பின்னகர்த்தப்படுகிறது. வாழ்பவையும் வாழத் துடிப்பவையும் தான் இலக்கியமாக இருக்க முடியும்.

புதிய சோதனைகள் வரவேற்கப்பட வேண்டியவைதான். அவை புதிய சோதனைகள் என்பதால் வெளிவந்த நேரத்தில் முழுமையாகத் தங்களை வெளிப்படுத்திக்கொள்ள வேண்டும் என்பதில்லை. பல படைப்புக்கள் வெளிப்பட்ட நேரங்களில் முழுமையாகப் புரிய வந்தவையும் அல்ல. அவற்றைப் புரிந்து கொள்ள கால அவகாசம் தேவைப்பட்டிருக்கிறது. இக்குணங் கள் கொண்ட படைப்புகள் நவீன இலக்கியத்தில் அபூர் வமானவையும் அல்ல ஆனால் புதிர்த்தன்மையை ஒரு எழுத்து கொண்டிருக்கும் காரணத்தினாலேயே அது மேலான படைப்பு என்ற முடிவுக்கு வர முடியாது. காலப்போக்கில் அது தன்னை வெளிப்படுத்திக் கொள்ளும் என்ற முடிவுக்கும் வர முடியாது. புதிர்த்தன்மை கொண்ட படைப்பும் அது வெளி வரும் காலத்தில் அதன் உயிரை கலாச்சாரத்தோடு பிணைத் துக் கொண்டிருக்கிறது என்றே நினைக்கிறேன். புதுமைப்பித்

தனின் சில கதைகள், அல்லது மௌனியின் பல கதைகள் அவை வெளிவந்த நேரத்தில் புதிர்த்தன்மை கொண்டவையாக இருக்கலாம். அப்போதும் அவை நம் வாழ்வுடனான இணைப்பை ஏதோ ஒரு விதத்தில் உணர்த்தின என்று நினைக்கிறேன். இந்த இணைப்பின் வழியாகத்தான் நாம் அவற்றுள் காலப்போக்கில் ஊடுருவிப் போயிருக்கிறோம். ஆனால் அந்நியமான ஒரு வாழ்வின் தளத்தில் நிகழும் புதிர்த்தன்மையை நாம் நகல் செய்யும்போது அந்தப் புதிர்த்தன்மையும் அந்நியமாக நிற்கிறது.

இந்நிலைகளை எல்லாம் நாளைய இளம் படைப்பாளி எந்த அளவுக்குப் பரிசீலனை செய்யப்போகிறான்? புதுமையை நிகழ்திக் காட்டவேண்டும் என்ற ஆர்வம் இருக்கும் அளவுக்கு அவன் விவேகம் கொண்டவனாகவும் இருப்பானா?

வாழ்க்கையை அறிவு பூர்வமாகக் கட்ட முயன்று கொண்டிருக்கிறார்கள். இதில் அடைபடல்களும் இருக்கின்றன; திமிறல்களும் இருக்கின்றன. நேற்றையத் திமிறல்களைக் கட்டிமுடித்துத் தலை நிமிரும்போது இன்றைய திமிறல்கள் தலை காட்டுகின்றன. மனிதனின் மனத்தையோ அல்லது உடலையோ இதப்படுத்தும் என்று நம்பப்படும் பண்டங்கள் உற்பத்தி செய்யப்பட்ட வண்ணம் இருக்கின்றன. இதன் அடிப்படை லாப வேட்கை. இந்தப் பொருட்களைப் பாய்ந்து பிடிக்கும் அளவுக்கு வாழ்க்கையின் செழுமைகூடும் என்ற பேதலிப்பை மனித மூளைக்குள் நிரந்தரம் திணித்து வருகின்றன. நவீன விளம்பரச் சாதனங்கள். நவீன விளம்பரச் சாதனத்திற்கு மனிதனும் ஒரு பண்டம். அந்தப் பண்டத்தைக் கொண்டு மற்றொரு பண்டம் வாங்கச்செய்வது அதன் வெற்றி. பண்டமாகச் சுருங்கும் மனிதன் தன் உயிர்ப்பைச் சிலிர்த்துக்கொள்ள இன்று எந்த சமூக அமைப்பும், எந்த நிறுவனமும் எந்த அரசும் உதவிக்கு இல்லை. கலைகள் மட்டுமே அவனுக்கு இருக்கின்றன. முக்கியமாக இலக்கியம். நாளையப் படைப்பாளி மனிதனின் புதிய துக்கங்களைப் பதிவு செய்தாக வேண்டும். மனிதன் நெருக்கடியில் தத்தளித்துக் கொண்டிருக்கும் காலம் வரையிலும் அவன் தூக்கிப் பிடித்துக்கொண்டிருக்கும் அறிவுக் கொடி அரைக்கம்பத்தில்தான் தொங்கிக் கொண்டிருக்கும். புதிய அறிவுகள் மூலம் அவன் பெற்ற வசதிகளையும் உருவாகி வரும் நெருக்கடிகள் விழுங்கிக் கொண்டிருக்கின்றன. நவீன மனிதன் தான் உருவாக்கும் வாழ்க்கை தன்னையே அழித்துவிடுமோ என்ற அச்சத்துடன் இருக்கிறான் இந்த அச்சம் பல்வேறு முகங்கள் கொண்டு நாளையஇலக்கியத்தில் பிரதிபலிக்கும்.

விலைமதிப்பற்ற சொத்துக்களான இயற்கை, காற்று, நீர் நிலைகள் ஆகியவை அழிக்கப்படுகின்றன. பெரிய மிருகங்களிலி ருந்து புழுக்கள் வரையும் சகல ஜீவராசிகளும் அழிக்கப்படுகின் றன. மண்வளம் அழிக்கப்படுகிறது. புதையுண்டு கிடக்கும் செல்வங்கள் சூறையாடப்படுகின்றன. மரணத்தைத் தழுவுவதில் மனிதர்களுக்குள் போட்டா போட்டி இருக்கிறதோ என்று நினைக்கும் அளவுக்கு அவன் தன் பழக்கவழக்கங்களில் சரிந்து கொண்டிருக்கின்றான். இன்றைய மரணங்களை அதிகமும் நாம் தற்கொலைகள் என்று தான் சொல்லவேண்டும். சக்தி உடலில் தேய்ந்துவர, சக்தியின் மறு உருவாக்கத்திற்கு உடல் திறனி ழந்து நிற்கும்போது கூடும் அமைதியே மரணம். மரணத்தின் இந்த இயற்கையான முகம் மனிதகுலத்திற்கு அந்நியமாகி விட் டது. பெரும்பான்மையான மனிதர்ப்பட்ட மனிதனின் கற்பனை களுக்கும் விவேகமான வாழ்க்கைக்கும் இடையே அவலம் புகுந்து கொண்டிருக்கிறது. இந்த அவலம் சார்ந்த கவலைகளை நாளைய இலக்கியம் கவனிக்கலாம். படைப்பாளி குறையான வாழ்க்கையை நிறைவானதாக நம்பி ஏமாறக்கூடியவன் அல்லன். அவன் இயற்கைக்கும் மனிதனுக்குமான உறவைப் போற்றுகிற வன். மனிதன் பெறும் மனநிறைவுகளை வைத்து அவனுடைய வாழ்க்கையை அளக்கிறவன். போலி வாழ்க்கையில் மயங் காதவன்.

— சுந்தர ராமசாமி

# அப்பாலிருக்கும் அந்த உலகம்

பால் வளிமண்டலத்தின் நட்சத்திரங்களில் சூரியனும் ஒன்று. இதனைச் சுற்றி ஒன்பது (09)கோள்கள் சுழன்று கொண்டு வருகின்றன. சூரியனும் அதைச் சுற்றி வரும் கோள்களும் 4.600 மில்லியன் ஆண்டு அளவில் தோன்றியதாக விஞ்ஞானிகள் நினைக்கிறார்கள்.

சூரியனுக்கு அண்மையில் இருக்கும் கோள்களில் பூமி மூன் றாவது இடத்தைப் பெற்றிருக்கிறது. பூமிக்கு ஒரு இயற்கைத் துணைக்கோள் அதன் ஈர்ப்பில் பூமியைச்சுற்றி வருகிறது. சந்தி ரன் பூமியில் இருந்து ,38, கி. மீற்றர் தொலைவில் இருக்கி றது. அது அளவில் பூமிக்கு 1/4 அளவுதான் இருக்கும். பூமி முற்றாக உருண்டையாக இருக்கிறதில்லை. வடக்கிலும் தெற்கி லும அது தட்டையாக இருக்கின்றது.

(சண்டே ரைம்ஸ் 15-01-95)

# இலங்கைத் தமிழரின் அரசியல் சிக்கல் நிலையும் இந்தியாவின் இரண்டக நிலையும்

*தமிழர்களிடையே ''சந்திரிகா அலையை,' ஏற்படுத்தி ''விடுதலைப் புலிகளிடமிருந்து அவர்களை விடுவிக்க முடியும்'' என்னும் ஒரு பேச்சு மறைமுகமாகவும் இன்னொருவழியில் ஊக்குவிக்கப்படுவதும் மிகவும் ஆபத்தானதாகும். பிரித்தாள்வதில் பிரித்தானியர்கள் வெற்றி கண்டனர். ஆனால் இன்றைய புத்திசாலித் தமிழர்களிடையே அது எடுபடமாட்டாது.*

இலங்கை சனாதிபதி ஜே. ஆர். ஜெயவர்த்தனா அவர்களின் வேண்டுகோளின்பேரில் 1987 ஆம் ஆண்டு 30 ஆம் நாள் இந்திய அமைதி காக்கும் படை இலங்கைக்கு வந்தது. இதன் மூலம் இந்தியா இலங்கையின் விடயங்களில் நேரடியாகத் தலையிட நேர்ந்தது. இந்த நேரடித்தலையீட்டினால் இந்தியப்படையினரில் 1155 பேர் உயிரிழந்தனர். இன்னும் பல நூற்றுக்கணக்கானோர் காயமுற்றும் அங்கங்களையும் அவயவங்களையும் இழந்தனர். அத்துடன் இந்தப் படையெடுப்புக்காக வரிசெலுத்துவோர் மூன்று பில்லியன் ரூபாவிற்கும் மேற்பட்ட பணத்தைச் செலுத்தி உள்ளனர் எனக் கணக்கிடப்பட்டுள்ளது. இந்தப்படை, 1990ஆம் ஆண்டு மார்ச் மாதம் இலங்கையி

லிருந்து வெளியேறியது. ஆயினும் தமிழீழ விடுதலைப் புலிகளிடம் இருந்து ஆயுதங்களைக் களைதல், இந்திய – இலங்கை ஒப்பந்தத்தை நிறைவேற்றுதல். ஆகிய தங்களது நோக்கங்களை இது நிறைவேற்றவில்லை. இவ்விடயம் அவர்களுக்கு அதிக உள வேதனையை ஏற்படுத்தியுள்ளது. எனினும் அங்குள்ள மாநிலங்கள் கூடியளவு அதிகாரத்தைக் கோராத அளவிற்கு இலங்கை இனச் சிக்கலைத் தீர்த்துவைப்பதில் இந்தியர் இன்னமும் ஆர்வம் கொண்டுள்ளது. இந்திய மாநிலங்கள் இப்போது அனுபவித்துவரும் அதிகாரங்களுக்குக் கூடுதலாக இலங்கை அரசு வடக்குக் கிழக்கு மாகாணங்களுக்கு அதிகாரங்களை வளங்குவது, அங்கும் அப்படியான கோரிக்கைக்கு வழிவகுக்குமென இந்தியா அஞ்சுகிறது.

இலங்கை இனச் சிக்கலில் இந்திய அரசு காட்டும் மனோபாவத்தை எனது தனிப்பட்ட அனுபவத்தின்மூலம் அறிந்தேன். 1987 ஆம் ஆண்டின் நடுப்பகுதியில் புதுடில்லியிலுள்ள ஐரோப்பிய பொருண்மியச் சமூகத்தின் தூதுவரின் முழுநேர ஆலோசகராக நான் பணியாற்றினேன். அப்போது ஓய்வுபெற்ற மூத்த இராசதந்திரியான திருமதி லட்சுமி மேனன் அவர்கள் என்னைக் காணவந்தார். நானும், அவரும், வேறு சிலரும் சில ஆலோசனைகளின் பின்னர் திரு. ராஜீவ் காந்தி அவர்களின் அமைச்சரவையில் மூத்த அமைச்சராக இருந்த திரு. பி. வி. நரசிம்மராவ் அவர்களைச் சந்தித்தோம். திருமதி மேனன் அவர்கள் தமிழீழ விடுதலைப் புலிகளிடம் இருந்து ஒரு செய்தியைக் கொண்டுவந்திருந்தார். அதில் இந்திய முறையிலான, இந்திய அரசியல் யாப்பில் உள்ள 3 வது 356 வது பிரிவுகள் நீக்கப்பட்ட ஒரு உண்மையான அதிகாரப் பரவலாக்கலைக் கொடுப்பதாக இருந்தால் தாங்கள் உள்நாட்டுப் போரை முடிவுக்குக் கொண்டுவருவர் எனக் கூறப்பட்டிருந்தது.

இந்திய அரசியல் யாப்பின் 3 வது பிரிவின்படி பாராளுமன்றத்தில் சாதாரன பெரும்பான்மை மூலமும், வேறுசில சட்ட நடவடிக்கைகள் மூலமும் ஒரு மாநிலத்தை நடைமுறையில் இல்லாது செய்யமுடியும். அதன் 356 வது பிரிவு சனாதிபதியின் ஒரு கையொப்பத்துடன் ஒரு மாநிலத்தின் அரசைக் கலைத்து அங்கு நிலவும் சனநாயகத்தை அழிக்கும் அதிகாரத்தை மத்திய அரசுக்கு வழங்குகின்றது.

இந்திய அரசியலமைப்பின் 3 ஆம், 356 ஆம் பிரிவுகள் இந்தியாவில் நடைமுறையிலிருக்கும்வரை இந்திய முறையிலும்

பார்க்க மேற்பட்ட ஒரு முறையை மேற்கொள்ளுமாறு இலங்கை அரசைக் கேட்கவோ, வற்புறுத்தவோ தன்னால் முடியாதெனத் திரு. ராவ் அவர்கள் திருமதி லட்சுமி மேனனுக்குத் தெளிவாக எடுத்துக் கூறினார். இந்திய அரசு அப்படிக் கேட்டுக்கொள்வது, இந்தியாவில் இப்பொழுது அதிக அதிகாரங்களை வழங்க வேண்டுமென்று கிளர்ச்சிசெய்துவரும் மாநிலங்களையும், அப்படியான அதிகாரத்தைக் கேட்கச் செய்யுமெனத் திரு. ராவ் கூறினார். குறிப்பாகத் தென்னிந்தியாவிலுள்ள இரண்டு முக்கிய மாநிலங்களில் காங்கிரஸ் கட்சி அண்மையில் தோல்வி கண்டபின்னர் திரு. ராவ் அவர்களின் கருத்து கடுமை அடைந்திருக்கிறது என்பது நிச்சயம்.

இந்தியா தன்னை ஒரு ''கூட்டாட்சி'' என்று அழைக்காமல் ''ஒன்றியம்'' என்றழைத்தாலும் அங்கு பல கட்சிமுறை கொண்ட, சமஷ்டியே இருக்கின்றது. அரசியல் யாப்பில் உள்ள விதிகளை மத்திய அரசு நடைமுறைப்படுத்த முனைவதால் மாநில அரசுகளுக்கும் மத்திய அரசுகளுக்குமிடையே இப்பொழுது இழுபறிநிலை தோன்றியுள்ளதை இந்தியாவில் காண முடிகிறது. வளங்களைப் பங்கிடுவதில் நியாயமான அதிகாரமின்மையே மத்திய அரசுக்கும் மாநில அரசுக்குமிடையில் பதற்றமும், குழப்பமும் நிலவுவதற்கான முக்கிய காரணமாகும். அரசியல் காரணங்களுக்காக சனாதிபதி ஆட்சியைக் கொண்டு வருவதற்கான அரசியல் யாப்பு விதிகளைத் தவறாகப் பாவித்தல், ஆளுனர் தனது சிறப்பதிகாரங்களைத் தவறாகப் பாவித்தல் என்பனவும் தொல்லையைக் கொடுப்பனவாகவுள்ளன. இது மத்திய அரசுடன் தங்கள் அதிகாரத்தைப் பகிர்ந்துகொள்ள முடியாத நிலையிலிருக்கின்ற அரசியல் கட்சிகளால் ஆளப்படும் மாநிலங்களை அவை சீர்குலைக்கப்படலாம் அல்லது கலைக்கப் படலாம் என்ற பயந்தநிலையில் எப்போதும் இருக்கச்செய்கின்றது,

மறுபுறத்தில் இன்றைய இந்திய அரசியல் யாப்பை மாற்றுமாறு காங்கிரஸ் அல்லாது ஏனைய கட்சிகள் கோருகின்றன. இதேவேளை இதேபோன்று ஒன்றைப் பல தியாகங்களையும் பெருமளவு இரத்தத்தையும் சிந்தியுள்ள இலங்கைத் தமிழ் மக்கள் ஏற்றுக்கொள்வார்களெனக் கனவுகூடக் காண முடியாது. இந்தக் கடைசிக் கணத்தில் இந்தநிலையை இந்திய, இலங்கை அரசுகள் கவனத்தில் கொள்ளவேண்டும். இலங்கைத் தமிழர்கள் தன்னாட்சியை முழுமையாக அனுபவிக்க விரும்புகிறார்களே அல்லாது அரைகுறையாகவல்ல. மொத்தத்தில் தமிழர்கள்

தங்கள் அலுவல்களைத் தாங்களே செய்யக்கூடிய, தேவையான அதிகாரங்களைக் கொடுத்தால் அவர்கள் தங்கள் கடுமையான வாழ்வை அமைதியாக அமைத்துக் கொள்ள உடன்படுவார்கள்.

சந்திரிகாவும் அவரது புதிய அரசும் தமிழ் மக்களின் மன உணர்வுகளைப் புரிந்துகொள்ளவேண்டும். அத்துடன் நாட்டின் நலன்களைப் பாதிக்காதவை எனக்கருதி அதிகளவு தன்னாட்சிக்கான அவர்களது அபிலாசைகளை அங்கீகரிக்கவேண்டும். இலங்கைத் தமிழர்கள் கூடியளவு அரசியல் அதிகாரத்தைக் கட்கின்றார்கள். பெரியளவில் பொருண்மியத்தால் முன்னேறுவதற்காக அவர்கள் அதை எதிர்பார்க்கின்றார்கள். அது ஏற்றுக்கொள்ளப்பட்டால் இலங்கை ஒரு சுபீட்சமுள்ள, பலமான, அமைதி நிலவுகின்ற நாடாக எழுச்சி பெறும்.

தமிழர்களிடையே ''சந்திரிகா அலையை'' ஏற்படுத்தி ''விடுதலைப் புலிகளிடமிருந்து அவர்களை விடுவிக்க முடியும்'' என்னும் ஒருபேச்சு மறைமுகமாகவும், இன்னொரு வழியில் ஊக்குவிக்கப்படுவதும் மிக ஆபத்தானதாகும். பிரித்தாழ்வதில் பிரித்தானியர்கள் வெற்றி கண்டனர். ஆனால் இன்றைய புத்திசாலித் தமிழர்களிடையே அது எடுபடமாட்டாது. திருமதி. சந்திரிகாவுக்கு முன்னர் ஆட்சி செய்த திருவாளர்கள் ஜெயவர்த்தனா, பிரேமதாசா, விஜயதுங்கா ஆகிய மூவரும் தமிழர்களைப் பிரித்தாளும், தமது முயற்சிகளில் பல கோடிக்கணக்கான ரூபாய்களைச் செலவிட்டனராயினும் பெருந்தோல்வியையே அடைந்தனர். அவர்களது நேர்மையற்ற நோக்கங்களாலும், பொருண்மிய அரசியற் குழறுபடிகளாலும் நாடு இந்த பரிதாபகரமான நிலைக்கு வந்துள்ளது. அவர்களது ஆட்சியின் கீழ் ஊழல் மட்டும் நீடித்திருந்து வந்ததுடன் சிறப்புற்றும் விளங்கியது. திருமதி. சந்திரிகாவின் நடைமுறைச் சாத்தியமான அணுகுமுறையுடன் இந்நிகழ்வுகள் கொடுத்திருக்கும் பாடங்களையும் புதிய ஆட்சியினர் கவனத்திற்கொள்ளவேண்டும்.

### அனைத்துலக அபிப்பிராயம்

இனவிகிதாசார ஆய்வுமுறையில் பார்த்தால் இப்போதைய நிலை மிகவும் மோசமாகவிருக்கின்றது. தமிழர்கள் கூடுதலாக வாழ்ந்து வரும் வடக்குக் கிழக்கில் அரசு சிங்களவர்களைக் குடியேற்றி வருவது 30 ஆண்டுகளுக்கும் மேலாகத் தமிழர்களுக்கு வெறுப்பையூட்டும் விடயமாக இருந்து வருகின்றது. இந்தக்குடி

யேற்றங்கள் இரண்டு நோக்கங்களைப் பூர்த்தி செய்கின்றன. ஒன்று வடக்குக் கிழக்கில் இனவிகிதாசாரத்தை மாற்றிப் பாராளு மன்றத்தில் தமிழர்களின் பிரதிநிதித்துவத்தைக் குறைக்கின்றது. இரண்டாவது வடக்குக் கிழக்கில் பெரும்பான்மையாகத் தமிழர் கள் வாழும் பகுதிகளின் நேரடித் தொடர்பை அறுக்கின்றது. ஆதலால் இது நிறுத்தப்படவேண்டும். வடக்குக் கிழக்கில் சிங் களவர்கள் காணி வாங்குவதுபற்றி எவரும் பெரும் கவலைப் படவில்லை. ஆனால் வேண்டுமென்றே குறிப்பிட்ட பகுதிகளில் இன விகிதாசாரத்தை மாற்றியமைக்கும் விதத்தில் அரசு மக்க ளைக் குடியேற்றுவது எதிர்க்கப்படுகின்றது.

உலகவங்கிகூட ஐரோப்பிய பொருண்மியச் சமூகத்திற்குச் சமர்ப்பித்த தனது அறிக்கையில் கிழக்கு மாகாணத்தில் மேற் கொள்ளப்பட்ட குடியேற்றம் பற்றிக் குறிப்பிட்டிருந்தது. அது பல சிக்கல்களை எதிர்கொண்டதாக அவ் அறிக்கையில் குறிப்பிட் டிருந்தது. அந்த அறிக்கையை நான் நேரடியாகக் கையாண் டேன். அதில் குறிப்பிடப்பட்டிருந்ததை அப்படியே நான் கீழே தருகின்றேன்.

"முதலாவதாகக் கொள்கை விடயத்தில் அது குடியேற்றத் திட்டப் பகுதியின் இனச் சமநிலைச் சிக்கலுடன் சம்பந்தப்பட் டுள்ளது. தேசிய இனச் சமநிலையின் அடிப்படையிலான ஒரு மீளக் குடியேற்றத் திட்டத்திற்கு அதிகாரிகள் யோசனை தெரி வித்திருக்கின்றனர். அப்படியான ஒருதீர்வை நடைமுறைப்படுத் துவதன்மூலம் அந்தப் பகுதியில் வாழ்ந்துவரும் தமிழர்களை குறைப்பதற்கு இட்டுச் செல்லும். தற்போதைய சூழ்நிலையில் இது வங்கியினால் ஏற்றுக் கொள்ளப்படமுடியாததாகக் காணப் படுகின்றது.

மகாவலித்திட்ட அதிகாரிகளும், குடியேற்றத்திட்டம் தேசிய இன அடிப்படையில் இருக்கவேண்டுமெனக் கூறி உலக வங்கி மேலாளர்களை (அதிகாரிகளை) ஏமாற்றப் பார்த்தனர். ஆனால் அது அந்தப் பகுதி மக்களுக்கு அநீதியாக இருக்கும் எனவும் குடியேற்றங்கள் அப் பகுதியிலுள்ள இன விகிதாசார அடிப் படையில் இருக்கவேண்டுமென்றும் உலகவங்கி வற்புறுத்தியது.

## நீடித்த சமாதானம்

சிங்களவர், தமிழர், முஸ்லிம்கள் ஆகிய மூன்று இனமக்களி டையே நம்பிக்கையைக் கட்டியெழுப்புவதே இந் நாட்டிலுள்ள எல்லா முற்போக்குச் சக்திகளினதும் பெரும் பணியாகும். 30 ஆண்டுகளுக்கு மேலாகத் தொடர்ச்சியாக இடம்பெற்றுவந்த பகைமை, வெறுப்பு, கொலைகள் ஆகியவற்றின் வடுக்களை ஒரு நொடியில் நீக்கிவிட முடியாது. மன்னித்து மறப்பதற்கும்

சில காலமெடுக்கும். தமிழர்களுக்கு எதிரான 38 ஆண்டுகால சிங்களவரின் வன்முறை வரலாறு 1956ஆம் ஆண்டு தொடங்குகின்றது. தமிழ்ப் பொதுமக்களுக்கெதிரான சிங்கள அரசின் வன்முறை 1983ஆம் ஆண்டு உச்சநிலையை அடைந்தது. சிங்களப் பொதுமக்களுக்கெதிரான போராளிகளின் வன்முறை அண்மையில் தொடங்கியதாகும். வடக்கிலும் கிழக்கிலும் நாசமாக்கப்பட்ட பகுதிகளைச் சீரமைப்பது ஒரு அரசியல் பேச்சுவார்த்தை நடத்துவதற்கான நம்பிக்கையையும், சரியான சூழ்நிலையையும் உருவாக்கும். அந்த அரசியல் தீர்வு இந்நாட்டில் நிலையான அமைதியையும், நீடித்த சமாதானத்தையும் கொண்டு வரும்.

தெற்கில் சிங்களமக்கள் கிணற்றுத்தவளைபோன்று எதுவும் தெரியாதவர்களாய் வாழ்ந்துகொண்டிருக்கிறார்கள். அரச கட்டுப்பாட்டிலுள்ள தொடர்புச் சாதனங்களால் பயன்தருவகையில் அவர்களுக்குப் பொய்ப்பிரச்சாரஞ் செய்யப்பட்டு வந்தது. தமிழர்களது கோரிக்கைகளைத் தீர்த்துவைக்கும்போது தங்கள் நலன்களுக்குப் பாதிப்பு ஏற்படும் என அவர்கள் நம்பவைக்கப் பட்டார்கள். அதிகாரப் பரவலாக்கல் செய்வது நாட்டைப் பிளவுபடுத்துவதற்கான முன்கூறி என அவர்கள் எண்ணினார்கள். மாற்றமுடியாதது எனத்தமிழர்கள் கருதும் வடக்குக் கிழக்கு இணைப்பானது பிளவைச் சட்டபூர்வமாக்குவது என எண்ணினர். அத்துடன் அது தமிழர்களது தாயகத்துக்கான உரிமையை அங்கீகரிப்பதைக் குறிக்கின்றது எனவும் எண்ணினார்கள். அரசின் ஆராய்ந்து திட்டமிடப்பட்ட கொள்கையின் ஒரு பகுதியைப் பிரச்சாரம் செய்யும் வகையிலேயே இப்பொய்ப் பிரச்சாரங்களைத் தொடர்புச் சாதனங்கள் செய்துவந்தன என்பதில் சந்தேகமில்லை. ஒரு சில ஆண்டுகளுக்கு முன்னர் தமிழர்களுக்குச் சில சலுகைகளைக் கூட வழங்குவதற்குப் பெரும்பான்மைச் சிங்களவர்கள் உடன்படவில்லை. ஆனால் இன்று அதே சிங்கள மக்கள் இனவாத சிங்களத் தலைமையைத் தூக்கியெறிந்து போரை ஒரு முடிவுக்குக் கொண்டு வரவேண்டுமென வேண்டுகோள் விடுத்த சனாதிபதி சந்திரிக்காவிற்குத் தங்கள் அளவிலா ஆதரவை வழங்கியுள்ளனர்.

சந்திரிக்கா பெற்ற ஆணை சிங்களக் கடும்போக்காளர்களைத் தற்காலிகமாகக் கட்டுப்படுத்தியுள்ளது. நாடு பிளவுபடாமல் இருக்க வேண்டுமானால் தமிழர்கள் தங்கள் விடயங்களைத் தாங்களாகவே செய்வதற்கான உரிமைகளும், அவர்களின் தேசிய தனித்துவமும் அங்கீகரிக்கப்படவேண்டும். இவைகளை ஏற்பதற்குப் பெரும்பான்மைச் சிங்களவர்களை வற்புறுத்தாவிடின் சிங்களக் கடும்போக்காளர்கள் மீண்டும் தலைதூக்குவார்கள்.

— எஸ். விஜயசிங்கம்

(ஐலண்ட் 23.10.1994)

# பூநகரிக் கடற்பாதையைத் திறத்தல்

பூநகரித்தளம் தேவையற்றது என்று சிலர் கூறுகிறார்கள். போர்முறையில் குடாநாட்டைச் சுற்றி வளைப்பதற்கும், அங்குள்ள புலிகளைக் கட்டுப்படுத்தும் நோக்கத்துக்கும் இந்தத் தளம் படையினருக்கு உதவியுள்ளது எனச் சிலர் கூறுகிறார்கள். ஆனால் விடுதலைப் புலிகளின் தவளை நடவடிக்கையினால் பூநகரி அழிக்கப்பட்டதும், கிளாலியில் ஏற்பட்ட பெருந்தோல்வியும் குடாநாட்டைச் சுற்றி வளைக்கும் போர் உபாயத்தை ஒரு போதும் நடைமுறைப்படுத்த முடியாதென்பதை நிறுவிவிட்டது.

அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையிலான தொடக்கப் பேச்சு வார்த்தைகளின்போது யாழ்ப்பாணக் குடாநாட்டுக்கான பாதையாக சங்குப்பிட்டி – கேரதீவுப் பாதையை மறுபடியும் திறப்பது ஒரு முதன்மையான அம்சமாக இருக்கும். யாழ்ப்பாணத்தில் வசிக்கும் மக்களுக்கு பொருட்களைத் தாராளமாகக் கிடைக்கச்செய்வது அரசாங்கத்தின் விருப்பமாகும். அத்தியாவசியப் பாவனைப் பொருட்களை தாராளமாகக் கிடைக்கச்செய்வது பேச்சுவார்த்தைகள் வெற்றியடைவதற்கு வழிவகுக்குமென விடுதலைப் புலிகள் திரும்பத் திரும்பக் கூறியிருக்கிறார்கள். இப்போதைய நிலையில் பருத்தித் துறைக்கும் கிளாலிக்கும் ஊடாகத்தான் குடாநர்ட்டுக்கான பொருட்களை விநியோகிக்கமுடியும். பொருளாதாரத்தடையை மேலும் தளர்த்தி போக்குவரத்திலுள்ள கட்டுப்பாடுகளை நீக்கி தாண்டிக்குளத்தினூடாக மேலதிக பொருட்களை குடாநாட்டுக்

குள் அனுமதித்தாலும், ஒரு தரைப்பாதை திறக்கப்படாத வரை யாழ்ப்பாணத்தில் விலைவாசிகளைக் குறைக்கமுடியாது.

கூட்டுறவு மொத்த விற்பனை நிலையமொன்றை அரசு யாழ்ப்பாணத்தில் விரைவில் நிறுவினாலும் அதுநாட்டின் மற்றைய இடங்களில் நிலவும் விலைகளோடு ஒத்துவரச் செய்ய முடியாது. ஏனெனில் சந்தைச் சக்திகளே விலைகளை தீர்மானிக்கின்றன. வழமையான சிக்கனமான பாதைகளால் யாழ்ப்பாணக் குடாநாட்டுக்குள் போதியளவு பொருட்கள் சென்றாலும் செயற்கையான தடையிருக்கும்வரை சந்தைச் சக்திகளும் திருப்திகரமான இலக்கை அடையமுடியாது. குறிப்பாக யாழ்ப்பாண மக்களின் நெருக்கடிகளைத் தீர்ப்பதே தற்போது தங்களின் முதன்மையான கவலையாக இருக்கிறது என இருசாராரும் வலியுறுத்தி வருவதால், யாழ்ப்பாணத்திற்குச் செல்லும் பாதைகளிலொன்றைத் திறப்பது சமாதானத் திட்டங்களில் தவிர்க்க முடியாததாகும்.

## கவனத்துக்கு எடுக்கவேண்டியது

யாழ்ப்பாணத்துக்கு இரண்டு பாதைகள் உள்ளன. ஒன்று ஆனையிறவுக்கு ஊடாகச் செல்வது, மற்றையது பூநகரிக்கு ஊடாகச் செல்லும் சாவகச்சேரிக்குத் தெற்கில் வரண்ட தரையாகவுள்ள கேரதீவு – சங்குப்பிட்டிக் கடற்பாதையாகும்.

கிளிநொச்சியிலுள்ள கண்டாவளையிலிருந்து கொம்படி ஊரியான் ஊடாகச் செல்லும் தரைப் பாதையை குடாநாட்டுக்குச் செல்லும் தரைப் பாதையாகக் கவனத்திற்கெடுக்கலாம். ஆனால் அதை வாகனங்கள் பாவிக்க முடியாது. மழைக் காலத்தின்போது அதில் ஏராளமாக வெள்ளம் நிறைந்திருக்கும். ஆனபடியால் ஆனையிறவு பூநகரிப் பாதைகளோடு அதைக் கவனத்திற் கொள்ளமுடியாது.

விடுதலைப் புலிகள் அனுமதித்தால் மட்டும் ஆனையிறவுப் பாதையை அரசு யாழ்ப்பாண மக்களின் போக்குவரத்திற்குத் திறந்துவிடும் என ஒரு எண்ணத்தை யாழ்ப்பாண மக்களிடையே ஏற்படுத்துவதற்கு அது முயற்சித்தபோது அந்தப் பாதையை மீண்டும் திறப்பது பற்றிய தங்கள் நிலையை விடுதலைப்புலிகள் தெளிவாக 1993 ஆம் ஆண்டின் தொடக்க காலத்தில் எடுத்துக் கூறிவிட்டார்கள். அந்தவேளையில் அவர்கள் யாழ்ப்பாணப் பொதுமக்களை ஆனையிறவுக்கு ஊடாகச் செல்வதற்கு ஏன் அனுமதிக்கமுடியாதென்பதை விளக்கவேண்டிய நிலைக்குள்ளாகியிருந்தார்கள்.

செய்திருக்கிறதுபோல் தோன்றுகிறது. ஆனால் 1993 ஆம் ஆண்டின் முற்பகுதியில் அரசு ஆனையிறவுப் பாதையைத் திறப்பதற்கு முற்பட்டபோது இருந்தது போலில்லாமல் அந்தத் தளம் இப்போது விரிவடைந்துவிட்டது. அது இப்போது பரந்தன் வடக்கிலிருந்து இயக்கச்சி சந்தி வரைக்கும் ஏறக்குறைய 05 கிலோ மீற்றர் தூரம் வரை நீண்டு விட்டது.

இப்போது படைகள் கடைப்பிடித்துவரும் பாதுகாப்பு முறைகளின்படி ஆனையிறவுத் தளத்திற்கூடாகவோ அல்லது சிறிது அப்பாலோ பொது மக்களைப் பயணஞ்செய்ய விடுவது முடியாததாகும். ஆனையிறவுத் தளத்திற்கூடாக குடா நாட்டிற்குச் செல்வதற்கான 05 கிலோ மீற்றர் தூரத்தை எல்லாப் பொது மக்களாலும் நடந்துசெல்லமுடியாது.

வடபகுதி விவகாரங்களில், குடாநாட்டிலிருந்து பூநகரிக்குச் செல்வதற்குரிய பாதை சட்டநிரூபண சபையில் யாழ் மாவட்ட அங்கத்தவர்களுக்கிடையில் விவாதத்திற்குரிய ஒரு விடயமாக உருவெடுத்து 1920 ஆம் ஆண்டு தொடக்கம் ஒரு பிரச்சனையாக இருந்துவருகின்றது. வடபகுதி அங்கத்தவர்கள் சிலர் சங்குப்பிட்டிக்கும் கேரதீவுக்குமிடையிலான கடற்பாதை அமைப்பதைப் பலமாக எதிர்த்தனர். அதைவிடப் புங்குடுதீவுக் கடற்பாதை மிகவும் அவசியமானதும் செலவு குறைந்ததுமென்றும் அவர்கள் உக்கிரமாக வாதாடினார்கள்.

## கருத்து மாறுபாடுகள்

சட்டமன்றத்தின் இறுதிக் காலத்தில் குடாநாட்டுக் கடற்பாதைகளைப் பற்றிய விவகாரம் இலங்கைத் தமிழ் உறுப்பினர்களிடையே மிகவும் கசப்பானதொரு விவாதமாக மாறிக் ‘கடற்பாதைப் போராட்டம்’ ஆகியது. போக்குவரத்து மற்றும் வேலைப்பகுதிக் குழுவிற்கும் தலைவராயிருந்த திரு. மாக்கான் மரைக்கார் வடபகுதி உறுப்பினர்களைக் கலந்தாலோசிக்காமல் பூநகரிப்பாதைக்கு எதிராகப் புங்குடுதீவுப் பாதைக்குச் சாதகமாக 1927 இல் தீர்மானம் எடுத்தார். அந்தத் தீர்வு பூநகரித் திட்டத்தை வலியுறுத்திவந்த அருணாசலம் மகாதேவா போன்றோரின் எதிர்ப்பினால் பின்போடப்பட்டது. பூநகரித் திட்டத்திற்கு ஆதரவாகத் திரு. அருணாசலம் மகாதேவா விவாதித்தார் யாழ்ப்பாணத்துக்கும் பூநகரிக்குமிடையிலான பாதை (அவருடைய தேர்தல் தொகுதிக்குள் வருகிறது) செலவு கூடினாலும் அதற்கேற்ப வர்த்தகப் போக்குவரத்து பெருந்தொகையாக இருக்குமென்றார். மேலும் பூநகரி அதிகளவு நெல் விளையும் ஓர் பிரதே

சமென்றும் அது வடக்கின் தானியக் களஞ்சியம் என்றும் கூறினார்.

திரு. ஜீ. ஜீ. பொன்னம்பலம் அவர்களும் அந்தச்சர்சையில் சேர்ந்து பூநகரிப் பாதைக்கு ஆதரவாகப் பேசினார். சட்ட நிருபண சபை உறுப்பினர்களான திருவாளர்கள் ஆனந்தமும் எஸ். நடேசனும் அந்தப் பாதைக்கு ஆதரவாகப் பேசினார்கள்.

விவாதத்திற்கிடையே சிங்கள உறுப்பினர்களிடமிருந்தும் இடையீடுகள் வரத்தொடங்கியன. தமிழ் உறுப்பினர்களிடமிருந்து எதிர்ப்புக்களும் அதிகரித்தன. அமைச்சர் மாக்கான் மரைக்கார் குடாநாட்டுத் தமிழ் உறுப்பினர்களை ஒன்றுசேரும்படி வேண்டு கோள்விடுத்தார். ''யாழ்ப்பாணத்து மக்களே ஒற்றுமையாக இருக்கமுடியாவிட்டால், வட பகுதி மக்களும் தென் பகுதி மக்களும் எப்படி ஒன்றுபடுவர்.'' என அவர் கேட்டார். இறுதியாக டி. எஸ். சேனநாயக்க அவர்கள் திருத்தப் பிரேரணை ஒன்றைக் கொண்டு வந்தார். அதன்படி பாதையைப் பற்றி மேலும் விரிவாக ஆராய்வதற்கு அது நிருவாகக் குழுவிடம் சமர்ப்பிக்கப் பட்டது. அந்தக் கடற் பாதை பற்றிய முடிவு இரண்டாவது அரச சபைவரை பின்போடப்பட்டு வந்தது. 1940 ஆம் ஆண்டுகளின் மத்தியகாலப் பகுதிவரை ஒரு கடற்பாதையும் நிர்மாணிக்கப்படவில்லை.

## முன்னேற்றம்

''எப்படியாயினும் 1985 ஆம் ஆண்டுகளின் முற்பகுதிவரையிலான இழுபறி நிலையின் பின்பு பூநகரிக் கடற்பாதை நிருமாணிப்பதில் சில முன்னேற்றம் காணப்பட்டது.'' அநேகமாக அது முற்றுப் பெறும் தறுவாயிலிருந்தது. பின்பு குழப்பங்கள் ஆரம்பமானதும் நிருமாண வேலைகள் கைவிடப்பட்டன. முதலாவது ஈழப்போரின்போது ஆயுதம் தாங்கிய குழுக்கள் மன்னாருக்கு விரைவாகச் செல்ல அது உதவியது. அப்போது பூநகரியின் முதலாம் கட்டையில் ஒரு சிறிய படைத்தளமே இருந்தது. அதனால் அந்த முகாமைச் சுலபமாகச் சுற்றிச் செல்லக் கூடியதாக இருந்தது. ஆனாலும் முதலாவது ஈழப்போரில் பூநகரிச் சந்தி போர்த்திறன் முக்கியத்துவம் வாய்ந்ததாக இருக்கவில்லை. 1991 ஆம் ஆண்டில் விடுதலைப் புலிகள் ஆனையிறவு முகாமை அதிகளவில் சேதப்படுத்தினர். பின்னர் படையினர் குடாநாட்டை பெருந் தரையிலிருந்து வேறுபடுத்தும் போர்த் திட்டமொன்றைத் தீட்டினர். அதிலிருந்து பூநகரி

(குன்றின் குரல் ஜனவரி 1995)

# இன்றைய தமிழகத்தில் இலங்கைத் தமிழர் பரும்பாடு

இன்றைய தமிழகத்தில் பல விசித்திரங்கள் நடைபெற்று வருகின்றன. கடந்த பத்தாண்டுகளுக்குள் தமிழகத்தில் இலங்கைத்தமிழர் பிரச்சினை பற்றி அரசியல் நிலைப் பாடுகள் தலைகீழாக மாறியிருக்கின்றன.

1983 இல் இலங்கைத்தீவில் தமிழினப் படுகொலை நடைபெற்றபொழுது தமிழகம் கொந்தளித்து எழுந்தது. அரசியல் கட்சிகளும் தொண்டு நிறுவனங்களும் தனிமனிதர்களும் போட்டி போட்டுக்கொண்டு இலங்கைத் தமிழர்களுக்கு உதவ முன்வந்தார்கள். இலட்சக் கணக்கான இலங்கைத் தமிழர்களுக்கு தமிழகம் புகலிடம் தந்தது. அகதி நிவாரணத்திற்கு மத்திய அரசும், மாநில அரசும் தாராளமாக நிதி உதவி வழங்கின.

அரசியல் ரீதியாகவும், பொருளாதார ரீதியாகவும், தார்மீக ரீதியாகவும் இலங்கை தமிழர்களின் உரிமைப் போராட்டத்திற்கு தமிழகமும், இந்திய அரசும் ஆதரவு வழங்கின.

அப்பொழுது தான் தமிழக முதலமைச்சர் எம். ஜி. இராமச்சந்திரன் (M.G.R) அவர்கள் இலங்கைத் தமிழ் மக்களின் உரிமைக்காக மெரீனா கடற்கரையில் ஒரு நாள் உண்ணாவிரதமிருந்தார். தமிழகம் முழுவதும் முழு அடைப்பு நடைபெற்றது.

எம். ஜி. இராமச்சந்திரன் அவர்கள் முதலமைச்சராக இருந்த பொழுது தமிழகம் முழுவதும், நிதிதிரட்டப்பட்டது. ஒவ்வொரு அரச ஊழியர்களும் ஒரு நாள் ஊதியத்தை இலங்கைத் தமிழர்களின் போராட்ட நிதியாக வழங்கினார்கள். தமிழகத்தின் அன்பும், ஆதரவும் கரை கடந்து நின்றது.

இலங்கை தமிழ் போராளிகள் செல்லப்பிள்ளைகளாக நடத்தப்பட்டார்கள். அவர்களின் தவறுதல்கள், சட்டமீறல்கள் பொருட்படுத்தவில்லை. அவர்கள் பகிரங்கமாக பொது இடங்களில் ஆயுதம் தாங்கி செல்ல அனுமதிக்கப்பட்டார்கள். மிகப் பயங்கர ஆயுதங்களை சுதந்திரமாக வைத்திருக்கவும், இரகசியமாக இறக்குமதி செய்யவும், சேகரித்து வைத்திருக்கவும் அனுமதிக்கப்பட்டார்கள். அவர்களிடமிருந்து பறிக்கப்பட்ட ஆயுதங்களைக் கூட திருப்பித்தர உத்தரவிடப்பட்டது. தமிழக அரசு ஒரு ஆதரவு அரசு என்ற நிலையை மீறி போர்க்களத்தில் ஒரு பங்காளி என்ற நிலையில் செயற்பட்டது.

அடுத்தபடியாக இந்திய இராணுவம் இலங்கைக்கு அனுப்பப்பட்டது. ஆரம்பத்தில் தமிழ்போராளிகளுக்கு ஆதரவாக அனுப்பப்பட்ட இராணுவம் காலப் போக்கில், சிங்கள அரசின் சாணக்கியத்தாலும், இந்திய அரசின் கொள்கை தடுமாற்றத்தாலும், போராளிகளுக்கு எதிரான இராணுவமாக மாறி தமிழ் மண்ணையும், மக்களையும் அதம் செய்தது. இதனால் இந்திய இராணுவம் இலங்கையிலிருந்து திரும்பி வரவேண்டியதாயிற்று.

இந்திய இராணுவம் இலங்கையிலிருந்து திரும்பிய பொழுது அவர்களுக்கு உறுதுணையாக இருந்த பல்லாயிரக்கணக்கான போராளி இளைஞர்களையும் பிரமுகர்களையும் அழைத்து வந்தார்கள். இந்திய இராணுவம் இருந்த காலத்தில் முதலமைச்சராக இருந்த வரதராஜப்பெருமாளும் அவரது சகாக்களும் இந்திய அரசின் அனுசரணையுடன் இந்தியாவிலேயே வாழ்கிறார்கள். இவ்வாறு இந்திய அரசின் தவிர்க்க முடியாத தமிழ் விருந்தாளிகள் இன்றைய தமிழகத்தில் இருக்கிறார்கள்.

இனப்படுகொலையால் பாதிக்கப்பட்டும். இலங்கை இராணுவத்தின் எதிர்நடவடிக்கைகளால் வீடு, வாசல்களை இழந்து உயிருக்கு அஞ்சி ஓடிவந்தவர்கள் இலங்கைத்தமிழ் அகதிகள். ஒரு காலகட்டத்தில் இரண்டு லட்சத்திற்கு மேற்பட்டவர்கள் அகதிகளாக தமிழ்நாட்டில் இருந்தார்கள். இப்பொழுது திரும்பியவர்கள் போக எஞ்சி இருப்பவர்கள் ஒரு லட்சத்துக்கு குறைவானவர்கள். ஏறக்குறைய ஒரு லட்சம் அகதிகள் தமது சுய

விருப்பத்தினடிப்படையிலேயே இலங்கைக்கும். பிறநாடுகளுக்கும் திரும்பிவிட்டார்கள்.

1991 ஆம் ஆண்டு தமிழகமண்ணில் தேர்தல் பிரச்சாரத்திற்காக வந்த ராஜீவ் காந்தி படுகொலை செய்யப்பட்டார். இந்த அரசியல் படுகொலை அவர் இலங்கைத் தமிழர் பிரச்சினையில் நேரடியாக தலையிட்டதன் காரணமாக ஏற்பட்டதன் விளைவே. எல்லா அரசியல் படுகொலைகளும் அப்படிப்பட்டனவே. மகாத்மா காந்தி, இந்திராகாந்தி ஆகிய தலைவர்களது அரசியல் படுகொலைகளும் அப்படிப்பட்டனவே, முதிர்ச்சியடைந்த அரசுகள் இத்தகைய அரசியல் விபரீதங்களுக்கு முறையாக முகங்கொடுக்கவேண்டிய நிலைக்கு நிர்ப்பந்திக்கப் படுகின்றன.

ராஜீவ் காந்தி படுகொலையில் சம்பந்தப்பட்ட சதிகாரர்கள் அனைவரும் இனம் காணப்பட்டு அவர்களுக்கெதிராக வழக்கும் நடைபெறுகிறது.

ஆனால் இந்தக் கொடிய நிகழ்ச்சிக்குப் பிறகு தமிழகத்தில் இலங்கைத் தமிழர்களுக்கு எதிரான ஒரு மனோபாவம் உருவாகி விட்டது. இது தவிர்க்கமுடியாததே, அனேகமாக எல்லா இலங்கைத் தமிழர்களும் சந்தேகக் கண்ணோடும் குரோதக் கண்ணோடும் நோக்கப்பட்டார்கள். இத்தகைய மனோபாவம் மிக பிற்போக்கானது அறிவு பூர்வமானது அல்ல என்றாலும் உணர்ச்சியின் அடிப்படையில் இப்படிப்பட்ட விரோத மனப்பான்மை உருவானதை இலகுவில் தவிர்க்கமுடியாது.

ஆனால் மிகவும் வேதனைப்படக்கூடிய உளம் நொந்து போவதுமான செயல் என்னவென்றால் தமிழக அரசு இலங்கைத் தமிழர்களுக்கு எதிராக ஏவி விட்ட, கட்டுப்பாடுகள் தான்

சில தமிழ் அகதிகள் முகாம்களில் சில தொண்டு நிறுவனங்கள் மனிதாபிமான சேவைகள் ஆற்றிவந்தன. தொழிற் பயிற்சி, கல்விச் சேவை மருத்துவ சேவை, சத்துணவு இலவச ஆடைகள் ஆகிய பணிகள் ஆற்றப்பட்டன. இப்பணிகள் நிறுத்தப்பட்டன. தொண்டுநிறுவனங்கள் அகதிகள் முகாம்களில் நுழைவதற்கே அனுமதி மறுக்கப்பட்டிருக்கிறது.

இவ்வாறு இலங்கைத் தமிழர்கள் பல்வேறு வகைகளில் நெருக்கப்பட்டு தன்மானமுள்ளவர்களாக வாழ முடியாத துர்ப்பாக்

கிய நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர். இதே சமயத்தில் தமிழ் அகதிகளையும் நாடு கடத்த வேண்டும் என்று தமிழக அரசு முடிவு செய்தது. இதற்கென்றே ஒரு கமிட்டியினர் நியமிக்கப்பட்டார்கள். ஏறக்குறைய 30,000 அகதிகள் இது வரை நாடு கடத்தப்பட்டுள்ளனர்.

---

முதன் முதலாக எல்லா இலங்கைத்தமிழர்களும் பதிவு செய்து கொள்ளவேண்டும் என்று நிர்ப்பந்திக்கப்பட்டார்கள். இதற்குரிய காலக்கெடு மிகக் குறுகியதாக இருந்தாலும், இதனை எப்படிச் செய்வது எனற தெளிவான வ்பரஙகளோ அறிவுறுத்தல்களோ காவலதுறைக்குச் சரியாகத தெரியாததால ஏற்பட்ட அனர்த்தங்களைச் சொல்லமுடியாது. தாயகம் திரும்பிய(இந்தியத்) தமிழர்களையும் பதிவுசெய்துகொள்ளுமாறு நிர்ப்பந்தப்படுத்தி படு கொடுமைகளும் அநீதிகளும் இழைக்கப்பட்டன. உயர் நீதி மன்றத்தின தீரபபு ஒன்று இந்த அட்டுழியத்தை நிறுத்தும்வரை தமிழக அரசு பொறுப்பான எந்த நடவடிக்கையையும் மேறகொள்ளவில்லை. இலங்கைத் தமிழர்கள் அனைவரும் காவலதுறைக்கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவரப்பட்டனர். ''Q''பிரிவுககு (தமிழ்நாடு உளவுப்பிரிவு)அளவற்ற அதிகாரங்கள்வழங்கப்பட்டுள்ளன. ஏறக்குறைய எலலா இலங்கைததமிழர்களையும் காவல்துறை அதிகாரிகள் விரும்பியபடி ஆட்டிவைப்பதற்கு வழிவகை செய்யப்பட்டது. காவலததுறை இலாகா முதலமைச்சர்ன் கட்டுப்பாட்டுக்குள் உளளது என்பதையும் நாம் மறப்பதற்கிலலை.

பதிவுசெய்வது மட்டுமில்லை, இலங்கைத் தமிழர்களுக்கு வாடகைககு வ்டுகொடுப்பவர்களும் அச்சுறுத்தபபட்டனர். இவர்கள் வேலை செய்யுமிடங்களிலிருந்து வ்லக்கப்பட்டனர். கல்லூரிகளில் அவர்களுக்கு அனுமதி மறுக்கப்பட்டது. பாடசாலைகளில் கூட இலங்கைத் தமிழ்ப் பிள்ளைகளுக்கு அனுமதி வழங்கப்படவில்லை.

இந்த நாடுகடத்தலை சர்வதேச நிறுவனங்களும், மனித உரிமை இயக்கங்களும் எதிர்த்தன. சர்வதேச ஒப்பந்தங்களின் அடிப்படையில், அரசியல் அகதிகளை அவர்களுடைய விருப்பத்துக்கு எதிராக நாடுகடத்த முடியாது. ஐரோப்பிய நாடுகள் கூட இலங்கைத் தமிழ் அகதிகளை இவ்வாறு வற்புறுத்தி நாடு கடத்துவதில்லை. தமிழகத்தில் முகாம்களில் உள்ளவர்கள் இலங்கைக்குப் போகச் சம்மதம் என்று எழுத்தில் தர பல்வேறு வகைகளில் வற்புறுத்தப்பட்டுள்ளார்கள்.

உதாரணமாக செங்கல்பட்டியிலே இலங்கைத் தமிழ் அகதிகளுக்கென ஒரு சிறப்பு முகாம் அமைத்திருக்கிறார்கள். இந்த முகாம் செங்கல்பட்டு சப்-ஜெயிலில் அமைந்துள்ளது. ஆகவே அகதிகள் முகாமை ஜெயிலாகவே நடத்தக் கூடிய வாய்ப்பிருக்கிறது. அகதிகளை கைதிகளாகவே நடாத்தக்கூடிய வாய்ப்பு இருக்கிறது. இது ஒன்றுதான் இந்த முகாமின் சிறப்பு.

இந்த சிறைச்சாலை இரண்டு பகுதிகளாகப் பிரிக்கப்பட்டிருக்கிறது. ஆண்களுக்கு ஒரு பகுதி பெண்களுக்கு ஒரு பகுதி – ஆண்கள் பகுதியில் நாற்பது சிறைக் கூண்டுகள் இருக்கின்றன. ஒவ்வொரு சிறைக்கூண்டும் 10''X6'' பரப்புள்ளது. 60 சதுர அடி கொண்ட ஒரு கைதிக்கூண்டு. இங்கு மின்விளக்கில்லை. உள்ளேயே மலசலம் கழிக்கும் வசதி உண்டு. இரும்புக்கம்பிகளாலான ஒரு கதவுண்டு. ஜன்னலில்லை. வெளிச்சத்திற்காக ஒரு சிறு திறப்பு மட்டுமே உண்டு. இந்த முகாம் ஜுலை 18ம் திகதி ஆரம்பிக்கப்பட்டது. இந்த முகாமிற்கு பல்வேறு முகாம்களிலிருந்தும் வேறு இடங்களிலிருந்து இலங்கைத் தமிழர்கள் இங்கு கொண்டுவரப்பட்டுள்ளார்கள். இவர்களை இங்கு கொண்டு வருவதற்கான எந்தவித விசேட காரணமுமில்லை, எல்லோரும் இலங்கைத் தமிழர்கள் என்பதே ஒரே ஒரு பொதுக்காரணம்.

''Q'' பிரிவு போலீசார் ஒருவரை நாடுகடத்த விரும்பினால் அவரை உடனடியாக இங்கு கொண்டு வருகிறார்கள், திருமணமாகாதவர்கள் இந்தியப் பெண்களை மணந்தவர்கள், பத்தாண்டுகளாக சட்ட பூர்வமாக வாழ்பவர்கள். டென்மார்க் நாட்டில் அகதியாக வாழ்ந்து விடுமுறைக்கு வந்தவர்கள், உல்லாசப் பிரயாணிகளாக வந்தவர்கள், நீதிமன்றத்தால் பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டவர்கள், இந்தியாவில் தொழில்புரிய ரிசர்வ் வங்கியினால் அனுமதிக்கப்பட்டவர்கள். யாழ்ப்பாணம், மட்டக்களப்பு, மன்னார், மலைநாடு, கொழும்பு ஆகிய பகுதிகளைச் சேர்ந்தவர்கள். இளைஞர் முதியோர், பெண்கள், குழந்தைகள், தமிழர், முஸ்லிம் இத்தியாதி இங்கே சிறைப்படுத்தப்

பட்டிருக்கிறார்கள். எப்படிப்பட்ட சிறை. கொடிய சிறை 60 சதுர அடிகொண்ட ஒவ்வொரு கூண்டுக்குள்ளும் நான்கு பேர் அடைக்கப்பட்டிருக்கிறார்கள்.

24 மணி நேரமும் அடைக்கப்பட்டிருக்கிறார்கள். காலை ஆறுமணிக்கு நீர் அள்ளுவதற்காக ஒவ்வொரு கூண்டும் 5 நிமிடங்களுக்கு திறந்து விடப்படும். 8 மணிக்கு உணவு வழங்குவதற்காக ஒரு முறை அதே ஐந்து நிமிடங்களுக்கு திறந்து விடப்படும். பகல் இரவு உணவுக்கும் இவ்வாறே

பார்வையாளர்களாக நெருங்கிய உறவினர்கள் மட்டுமே அனுமதிக்கப்படுவார்கள் ஞாயிற்றுக்கிழமைகள் தவிர்ந்த ஏனைய நாட்களில். நான்கு மணி முதல் ஆறு மணிவரை பார்வையாளர்கள் அனுமதிக்கப்படுகிறார்கள் அதுவும் ஒரு பார்வையாளருடன் பத்து நிமிடங்கள் மட்டுமே பேசலாம். பேசுகின்ற பொழுது ஏராளமான பொலீஸ்காரர்கள் சூழ்ந்து கேட்டுக் கொண்டிருப்பார்கள். இத்தனை கெடுபிடிகளுக்குப் பிறகு இலங்கை செல்ல விருப்பமா? என்று கேட்டால் யார் மாட்டேன் என்பார்கள்? இங்குள்ள 147 அ(கை)கதிகளும் இன்றே செல்ல விருப்பம் என்று ஒரே குரலில் கூறியும் Q பிரிவு பொலிசார் இவர்களை 20 நாட்களுக்கு மேலாக அடைத்து வைத்திருப்பதின் அர்த்தமோ அட்டூழியமோ யாருக்கும் விளங்கவில்லை.

இங்கே அடைத்து வைக்கப்பட்டிருப்பவர்களுக்கு ஏன் அடைத்து வைக்கப்பட்டிருக்கிறார்கள் என்ற விளக்கமே தரப்படுவதில்லை. எந்த நீதிபதியோ இவ்வாறு அடைத்து வைப்பதற்கு அதிகாரம் வழங்கவில்லை. இது ஒரு எதேச்சதிகாரமான முடிவு. அப்பட்டமான மனித உரிமை மீறல் பொர்லிஸின் சர்வாதிகாரம் கேட்டால் அவர்கள் கூறும் ஒரே ஒரு பதில் இது அரசாங்கக் கட்டளை.

இப்படிப்பட்ட முரட்டுத்தனமான அரசாங்கக் கட்டளை இருக்க முடியுமா? ஒரு நாகரீகப்பண்பும். ஜனநாயக உணர்வும் உள்ள எந்த ஒரு அரசும் இப்படி ஒரு கட்டளையை பி ப்பிக்க முடியாது. இந்தியாவில் வேறு எந்த மாநிலத்திலும் இப்படியொரு காட்டுமிராண்டித்தனமான கட்டளை இல்லை இலங்கைத் தமிழர்கள் இந்தியாவின் பல்வேறு மாநிலங்களில் வாழ்கின்றார்கள். அவர்களுக்கு இத்தகைய கட்டுப்பாடுகள் இல்லை. தமிழ் நாட்டிலையே ஏறக்குறைய 80 ஆயிரம் இலங்கை தமிழர்கள் வாழ்கின்றனர் என்று அரசாங்கப் புள்ளி விபரங்களே

கூறுகின்றன. அத்தனைபேரையும் சிறைப்படுத்தி நாடு கடத்து வது சாத்தியமான காரியமா? இருப்பினும் தமிழகப் பொலீசார் எதேச்சதிகாரப் போக்கில் நடந்து கொள்ள அரசு அனுமதிப் பதால் ஊழல்களும், ஒழுங்கீனங்களும் அராஜகங்களும், அநீதிக ளும் கட்டுப்பாடின்றி ஓங்க அரசாங்கமே வழிவகுக்கின்றது.

இன்றைய உலகில் அகதிகள் பிரச்சினை பூதாகாரமானது. அநேகமாக எல்லா நாடுகளிலும் அகதிகள் இருக்கின்றார்கள். ஐரோப்பாவில் மட்டுமே ஒரு கோடி அகதிகள் இன்று இருப் பதாக அண்மைக் கால புள்ளி விபரங்கள் கூறுகின்றன. உலகம் முழுவதும் ஏறக்குறைய மூன்று கோடி அகதிகள் இருக்கின்றா ர்கள். இவர்களை மனிதாபிமான முறையில் நடத்தவும் வாழ் வழிக்கவும் ஐக்கிய நாடுகள் சபையே அகதிகளுக்கான உயர் அதிகார அலுவலகம் ஏற்படுத்தியிருக்கிறது. எந்த நாட் டிலேயும் அகதிகளை 24 மணிநேர சிறைக் கூண்டுக்குள் அடைத்து வைத்திருக்கும் அநீதி நடைபெறவில்லை. தமிழகத் தில் மட்டுந்தான் இந்த காட்டுமிராண்டித்தனமான செயல் நடைபெறுகிறது.

ஜெர்மனியில் தான் இன்று ஏராளமான அகதிகள் இருக் கிறார்கள். ஏறக்குறைய 50 லட்சம் அகதிகள் அந்த நாட்டி லிருக்கிறார்கள். இதனால் இந்திய அகதிகளுக்கெதிராக சில வலதுசாரி, நாஜி இயக்கங்கள் வன்முறைகளைத் தூண்டிவிடுகி ன்றன. அண்மையில் ஐந்து துருக்கியர்கள் கொல்லப்பட்டார் கள். அவர்களுடைய மரண ஊர்வலத்தில் அந்த நாட்டின் சனாதிபதியே கலந்து கொண்டு அனுதாபம் தெரிவித்தார். ஜெர்மனியில் எந்த அகதியும் கைது செய்யப்படுவதில்லை.

ஹிட்லரின் ஜெர்மனியில் தான் யூதர்கள் கண்ட கண்ட இடங்களில் தாக்கப்பட்டார்கள் சிறைப்படுத்தப்பட்டார்கள். கூண்டோடு நச்சுப்புகையூட்டி கொல்லப்பட்டார்கள். அவர்களை முகாம்களில் அடைத்து வைத்தார்கள். இந்த அரக்கத்தனமான கொடுமையை இன்று ஜெர்மனியரே நினைத்து வெட்கப்படுகி றார்கள். அவமானப்படுகிறார்கள். யூதர்களிடம் ஜெர்மனி மன்னிப்புக் கேட்டுக்கொண்டது ஆனால் இன்றைய தமிழகம் ஹிட்லரின் காட்டுமிராண்டித்தனத்தை வெட்கமின்றி கைப் பற்றுகிறது.

இலங்கைத் தமிழர்கள் யாரார்யிருந்தாலும் சிறைப்பிடிக்கப்பட லாம் என்ற அதிகாரத்தை இப்பொழுது அமுல் நடத்தி வருகி றது. இலங்கைத் தமிழர்களை யூதர்களை ஹிட்லர் நடத்தியது

போல் இன்றைய தமிழகம் நடத்தி வருகிறது. இன்னும் நச்சுப் புகையை மட்டும் உபயோகிக்கத் தொடங்கவில்லை.

இதற்கெல்லாம் அடிப்படைக்காரணம் இலங்கைத் தமிழர் களை கட்டுப்படுத்த வேண்டும் என்பதற்காக அல்ல ஆட்டங் கள் கண்டிருக்கின்ற தனது அரசை காப்பாற்றிக் கொள்வதற் காக சட்டம் ஒழுங்கை கண்டிப்பாக அமுல் நடத்துவதாகப் பாசாங்குசெய்வதற்காகவும் தனது ஊழல்களை மறைப்பதற் காகவும் இலங்கைத் தமிழர்களை நரபலி இட இன்றைய அரசு முடிவு செய்துள்ளது.

அப்பாவி மக்கள்மீது அகதிகளாய் அவலமுறுகின்ற மக்கள் மீது அநீதியையும் காட்டுமிராண்டித்தனத்தையும் கட்டவிழ்த்து விட்டு நல்லபயன் அடையமுடியுமா? கொடுமை செய்து பெருமை அடையமுடியுமா?

இன்றைய தமிழகத்தின் இலங்கைத்தமிழர்கள் ஆலைக்கரும் பாய் பிழியப்படுகிறார்கள் மனிதாபிமானம் அற்ற முறையில் கொடுமை படுத்தப்படுகிறார்கள். விலங்குகளாக வேட்டைப் பிராணிகளாக நடாத்தப்படுகிறார்கள் சில தமிழர்கள் இன் றைய தமிழகத்தில் படும்பாடு உலகத்தில் எந்த அகதி மக்க ளும் காணப்படாத பாடாயிருக்கிறது. தமிழகத்தில் நாகரீ கப்பண்புகள் நசிந்துபோயினவோ என்று இலங்கைத்தமிழ் அக திகள் அங்கலாய்க்கிறார்கள்.

— இரா. சிவலிங்கம்
ஆசிரியர் மக்கள் மன்றம், தமிழ்நாடு

---

சரிநிகர்:— இனப்பிரச்சினை தொடர்பாக சந்திரிகா எப்படி நடந்து கொள்வார் என எதிர்பார்க்கிறீர்கள்

ஒஸி அபயகுணசேகரா:— சந்திரிக்காவுக்கு மூன்று பாஷைகள் கதைக்கத் தெரியும். அது தமிழ், சிங்களம், ஆங்கிலம் போன்ற மொழிகள் அல்ல. சிறுபான்மையோரைச் சந்தித்தால் அவர் விஜயகுமாரதுங்காவின் மொழியில் கதைப்பார். தெற்கிலுள்ளசிங்கள பௌத்தர்களைச் சந்தித்தால் அவரது அம்மாவின் பாஷையில் கதைப்பார். இருசாரரும்சந்தித்தால்அவரது அப்பாவின் மொழியில் கதைப்பார். இவரது அப்பா செய்ததைப்போல்தான் இவரும் செய்கிறார். பதவிக்கு வருவதற்காக இவரது அப்பாவைப்போல் மக்களுக்கு வாக்குறுதி கொடுத்த இலங்கையர் எவரும் இல்லை. எல்லோருக்கும் எல்லா வாக்குறுதியும் அளித்தார்.

நவ. டிச. 994

(வீரகேசரி 29-01-1995)

# பேச்சுவார்த்தையில் அரசாங்கத்தின் அடுத்தகட்ட நடவடிக்கை என்ன?

யார் விரும்பினாலென்ன விரும்பாவிட்டாலென்ன இந்த நாட்டின் ஒருபகுதியை விடுதலைப் புலிகள் தமது கட்டுப்பாட்டுக்குள் வைத்துள்ளார்கள். அங்கு அவர்களது அனுமதியின்றி எதனையும் செய்ய முடியாது. ஒருபிரதான அமைப்பாக புலிகள் வளர்ச்சியடைந்துள்ளார்கள்.

அரசியல் பலத்தின் அடிப்படையிலா இராணுவ பலத்தின் அடிப்படையிலா பேச்சுக்களை முன்னெடுப்பது...? சனாதிபதியின் உறைப்பான தொனியும் விடுதலைப்புலிகளின் தளராதபிடியும்.

விடுதலைப் புலிகளுக்கும் அரசாங்கத்திற்கும் இடையேயான பேச்சுவார்த்தைகள் ஒரு 'இறுக்கமான' நிலைக்கு வந்துள்ளன. இருதரப்பினருக்கும் இடையேயான 'சீரீயஸான' பேச்சுவார்த்தைகள் இனிமேல் தான் ஆரம்பமாக வேண்டுமெனக் கடந்த வாரத்தில் கூறியிருந்தோம். ஆனால், அடுத்த கட்டப்பேச்சுவார்த்தைகளை எங்கிருந்து ஆரம்பிப்பது என்பதில் இரு தரப்பினருக்குமிடையே தீவிரமான முரண்பாடுகள் ஏற்பட்டுள்ளன. இது இந்த இறுக்கமான நிலையை மேலும் தீவிரப்படுத்துவதாகவுள்ளது. எதிர்காலப் பேச்சுவார்த்தைகள் எவ்வாறு அமையப்போகின்றன என்பதையிட்டும் பல கேள்விகளை இந்த இறுக்கமான நிலை ஏற்படுத்தியுள்ளது.

கடந்த வாரம் 'இந்து' வுக்கு (The Hindu) அளித்த பேட்டி சற்று இனிப்பான தொனியில் கருத்துகளை வெளியிட்ட

சனாதிபதி சந்திரிகாவின் தொனியில் ஒரு மாற்றம் இப்போது காணப்படுகின்றது. இவ்வாரம் 'லீ மொண்' என்ற பத்திரிகைக்கு அவர் அளித்த பேட்டியில் ஒரு 'உறைப்பான' தொனியில் கருத்துக்களை வெளியிட்டுள்ளார்.

சந்திரிகாவின் இந்த உறைப்பான தொனி, பேச்சுக்களில் ஏற்பட்டுள்ள இறுக்க நிலைமையைத் தணிப்பதற்கு எந்த வகையிலும் உதவப்போவதில்லை. ஆனால், மறுபக்கத்தில் விடுதலைப் புலிகளுக்கும் அரசுக்கும் இடையேயான எதிர்கால உறவுகள் எப்படித் தொடரும் என்பதையிட்டு அனுமானிக்கமுடியாத ஒரு நிலையை இது ஏற்படுத்தியுள்ளது.

அரசியல்ரீதியான பலத்துடன் நின்று இந்தப் பேச்சுவார்த்தைகளைத் தொடர்வதா அல்லது இராணுவ ரீதியிலான பலத்துடன் நின்று, இராணுவ முனைப்புக்களின் மூலமான நிர்ப்பந்தத்துடன் பேச்சுவார்த்தைகளைக் கொண்டுசெல்வதா என்ற இரு வேறுபட்ட நிலைப்பாடுகளில் அரசாங்கம் தடுமாறுகின்றது. இவற்றுக்கிடையே ஒரு தெளிவான நிலைப்பாட்டை எடுக்க வேண்டிய அவசியத்தையே விடுதலைப் புலிகளின் நெருக்குதல் அரசாங்கத்திற்கு ஏற்படுத்துவதாகவுள்ளது.

இராணுவம் 'மனமொப்பிய' அங்கீகாரத்துடனேயே அரசியல் தீர்வொன்றை அரசாங்கத்தால் முன்னெடுத்துச் செல்ல முடியுமென்ற கருத்து ஏற்றுக்கொள்ளக்கூடியதொன்றாகவே உள்ளது. இராணுவத்தின் இறுக்கமான நிலைப்பாட்டில் சில தளர்வுகளை அரசாங்கத்தால் ஏற்படுத்தக்கூடியதாக இருந்தபோதிலும், முழுமையான ஒரு தளர்வை அரசாங்கத்தால் ஏற்படுத்த முடியவில்லை.

**சந்திரிகா அங்கீகாரம்**

'இந்து' பத்திரிகைக்கு அளித்த பேட்டியில் விடுதலைப் புலிகள் தொடர்பாகவும், சமாதான முயற்சிகள் தொடர்பாகவும் சனாதிபதி தெரிவித்த பல விடயங்கள் யதார்த்த நிலையைப் பிரதிபலிப்பனவாக அமைந்துள்ளன. ''யார் விரும்பினாலென்ன விரும்பாவிட்டாலென்ன இந்நாட்டின் ஒருபகுதியை விடுதலைப் புலிகள் தமது கட்டுப்பாட்டுக்குள் வைத்துள்ளார்கள். அங்கு அவர்களது அனுமதியின்றி எதனையும் செய்ய முடியாது. ஒரு பிரதான அமைப்பாகப் புலிகள் வளர்ச்சியடைந்துள்ளார்கள். எனவும் சனாதிபதி இந்தப் பட்டியில் தெரிவித்திருக்கிறார்.

விடுதலைப் புலிகள் தொடர்பாக சனாதிபதி வழங்கியுள்ள ஒரு அங்கீகாரமாகவே இது உள்ளது. தமது கட்டுப்பாட்டிலுள்ள பகுதிகளில் தனியான அரசொன்றின் தோற்றத்தை விடுதலைப் புலிகள்ஏற்கனவே அமைத்துள்ளார்கள். இங்கு அவர்கள் பெற்றுள்ள மேலாதிக்கமே, பேச்சுவார்த்தை மேசைக்கு அவர்களை அழைக்க வேண்டிய நிர்ப்பந்தத்தை அரசாங்கத்துக்கு ஏற்படுத்தியது.

அரசியல்–இராணுவ ரீதியிலான பலமே, பேச்சுவார்த்தைகளில் பேரம் பேசும் சக்தியை அதிகரிப்பதற்குத் காரணமாகிறது. சனாதிபதி சந்திரிகாவும், விடுதலைப்புலிகள் அமைப்பின் தலைவர் திரு வே. பிரபாகரனும் மோதல் தவிர்ப்பு உடன்படிக்கையில் கையொப்பமிட்டதன்மூலம், ஒரு சமநிலை வெளிப்படுத்தப்பட்டது. அதேவேளையில் இந்நாட்டில் இரண்டு இராணுவங்கள் உள்ளன என்பதையும் இந்த உடன்படிக்கை தெளிவாக அங்கீகரித்துள்ளது.

இந்த நிலையில் பேச்சுவார்த்தை மேசைக்கு வருவதற்கு இணங்கியதன்மூலம் முக்கியமான ஒரு செய்தியை விடுதலைப் புலிகள் அரசுக்குத் தெரிவித்திருந்தார்கள். தனிஈழம் என்பதை விட ஐக்கியப்பட்ட இலங்கைக்குள் தீர்வொன்றைக் காண்பதற்குத் தாம் தயாராக இருப்பதாக இதன்மூலம் அவர்கள் தெளிவாகக் கூறியுள்ளார்கள். முதல் மூன்று கட்டப்பேச்சுக்களிலும் இது தெளிவாக வெளிப்படுத்தப்பட்டது.

இந்நிலையில் அரசாங்கமே தன்னுடைய நிலைப்பாட்டைத் தெளிவாக வெளிப்படுத்த வேண்டியநிலை உள்ளது. இராணுவ முனைப்புக்கள் முன்னணிக்குவரும் நிலையில் அரசியல் முனைப்புக்கள் பின்னணிக்குச் சென்றுவிடும் என்ற விடுதலைப் புலிகளின் சந்தேகம் நியாயமானதொன்றாகவே உள்ளது. அத்துடன் கடந்த காலப் படிப்பினைகளையும் அடிப்படையாகக் கொண்டேதமது நிலைப்பாட்டை விடுதலைப் புலிகள் மேற்கொண்டுள்ளதாகத் தெரிகிறது.

அரசியற் பிரச்சினைகளையிட்டு ஆராய்வதற்கு முன்னர் அன்றாடப் பிரச்சனைகளையிட்டே கவனம் செலுத்தப்பட வேண்டுமென்பதற்கான தனது நியாயத்தை விடுதலைப் புலிகளின் ஆலோசகர் டாக்டர் அன்ரன் பாலசிங்கம் தெரிவித்திருக்கிறார். முதலாவது கட்டப் பேச்சுவார்த்தைகளின்போது இந்த நிலைப்பாட்டை அரசாங்கமும் ஏற்றுக்கொண்டது. அப்போது சந்திரிகா பிரதமராக இருந்தார். வாக்குறுதிகளையளிப்பது அப்போது அவருக்குக்கடினமானதாக இருக்கவில்லை.

சனாதிபதியாக வந்த பின்னர் சொல்வதைச் செயலிலும் காட்ட வேண்டியுள்ளது. யாழ்ப்பாணத்தில் கொடுக்கும் வாக்குறுதிகளைக் கொழும்பில் வந்து நிறைவேற்ற முடியாத நிலை தோன்றிவிட்டது. கொழும்பில் இதனை நிறைவேற்றாமல் ''எந்த முகத்துடன்'' மீண்டும் யாழ்ப்பாணம் செல்வது?

மூன்று சுற்றுப்பேச்சுகளில் பல விடயங்கள் பேசப்பட்டன. ஆனால் இதன் நன்மைகள் எதுவுமே தமிழர்களைச் சென்றடையவில்லை. பொருளாதாரத்தடை தளர்த்தப்பட்டது. ஆனால் இதன் நன்மைகள் மக்களது கைகளுக்குக் கிடைக்கவில்லை. மின்சாரம், தொலைபேசி சில வாரங்களில் கிடைக்கும் என முதலாவது சுற்றுப்பேச்சுக்களின் போதே கூறப்பட்டது. ஆனால் இன்று வரை எந்த நடவடிக்கையும் இல்லை.

மூன்றாம் கட்டப் பேச்சுக்களின்போது அரச பிரதிநிதிகள் ஒரு வாக்குறுதியை அளித்தார்கள் 20 வகையான பொருட்கள் மீதான தடை உடனடியாகத் தளர்த்தப்படும் என அவர்கள் யாழ்ப்பாணத்திலும் கொழும்பிலும் அன்று சொன்னார்கள். ஆனால் ஒரு வார காலத்தின் பின்னர் 12 வகையான பொருட்களின் தடையே நீக்கப்பட்டுள்ளது.

எனவே, அடுத்த பேச்சின்போது மீதி எட்டுப்பொருட்களுக்கும் என்ன நடந்தது என்பதையே புலிகளுக்கு அரசு விளக்க வேண்டியிருக்கும். அதற்கான பதிலையே அரச தூதுக்குழு தயாரித்துக் கொண்டுசெல்ல வேண்டியிருக்கும்.

**உறைப்பான கருத்து**

இந்நிலையில் விடுதலைப் புலிகள் புதிய புதிய கோரிக்கைகளை முன்வைப்பது தனக்கு நியாயமான ஒரு காரியமாகப் படவில்லை என ''லீ மொன்'' என்ற பிரான்ஸ் பத்திரிகைக்கு அளித்த பேட்டியில் சனாதிபதி சந்திரிகா தெரிவித்திருக்கின்றார். ''விடுதலைப் புலிகள் சமாதானத்தை விரும்பவில்லையானால் தொடர்ந்தும் சிக்கல்களை உருவாக்கிக் கொண்டிருப்பார்களேயானால் போருக்குச் செல்வேன் என்று நான் கூறவில்லை. ஆனால் நன்கு ஆயுதம் தரித்த இராணுவத்தைக் கொண்ட மன உறுதியும் நேர்மையுமுடைய அரசாங்கத்தினால் போரில் வெற்றி காண முடியும்'' எனவும் அவர் அப்பேட்டியில் குறிப்பிட்டிருக்கின்றார்.

பூநகரி முகாம் அகற்றப்படுதல், பொருளாதாரத்தடைகள் முற்றாக நீக்கப்படுதல், அகதிகள் மீளக்குடியமர்த்தல், மீன்

பிடித் தடையை முற்றாக நீக்குதல் ஆகியவற்றையே விடு தலைப் புலிகளின் ''புதிய புதிய'' கோரிக்கைகள் என சனாதிபதி குறிப்பிட்டிருக்க வேண்டும். ஆனால் நான்கு மாதங்களுக்கு முன்னர் முதலாவது சுற்றுப் பேச்சுக்கள் ஆரம்பமானபோதே இக்கோரிக்கைகள் முன்வைக்கப்பட்டன அவை ஏற்றுக் கொள் ளவும்பட்டன.

இப்போது தான் இவை 'புதிது, புதிதாகத்'' தோன்று வதற்கான பின்னணிக் காரணங்களை விளக்கவேண்டியதில்லை

சனாதிபதி மற்றுமொரு கருத்தினையும் இங்கு முன்வைத் தார். ''யாழ்ப்பாணத்திற்கு உணவுப்பொருள்களையும் மருந்து வகைகளையும் இரண்டு கப்பல்களில் அரசு அனுப்பியது. ஆனால் இச்செயல்களுக்குப் பிரதியுபகாரமாகப் புலிகள் 20 கைதிகளை மட்டுமே விடுதலை செய்தனர்'' எனவும் சனாதிபதி குறைப்பட்டுள்ளார்.

மக்களுக்காக உணவுப் பொருட்களை அனுப்புவதற்கே அரசியல் ரீதியாக பிரதியுபகாரமொன்றை சனாதிபதி எதிர் பார்க்கிறார் என்பதை அவரின் இக் கூற்று வெளிப்படுத்து கின்றது. அதாவது தமிழர்களுக்கு ''ஏதாவது'' கொடுத் தால் பிரதியுபகாரமாகப் பெற்றதைக் கொண்டுவந்து சிங்கள மக்களுக்குக் காட்ட வேண்டிய நிலை சனாதிபதிக்கு உள்ளது. எதிரி நாடொன்றுக்கு விட்டுக் கொடுப்புச் செய்வதைப் போன் றதாகவே சனாதிபதியின் இந்தத் தொனி உள்ளது.

பாப்பரசர் வந்துசெல்லும் வரையில் சமாதானச் சூழ் நிலை ஒன்று நிலவவேண்டுமென அரசு கருதியதால் தனது குரலைச் சற்று அடக்கியே வைத்திருந்தது.

### ஒரு புதிய பரிமாணத்தில்......!

ஆனால் பிரச்சனை இன்று ஒரு புதிய பரிமாணத்தை எடுத் துள்ளதென்பதை ஏற்றுக்கொள்வதாகவே அரசின் நடவடிக் கைகள் அமையவேண்டும். தாக்குதல் தவிர்ப்புக் கண்காணிப் புக்குழுவில் வெளிநாட்டவர்கள் இடம்பெற்றுள்ளமை இப்பரி மாணத்தின் முதலாவது அம்சமாகும். அண்மையில் இலங் கைக்கு விஜயம் செய்த பாப்பரசர் மற்றும் பங்களாதேஷ் பிரதமர் ஆகியோர் இனப்பிரச்சனைக்கான தீர்வு தொடர் பாகவே முக்கியமாகப் பிரஸ்தாபித்தனர். இனப்பிரச்சனை பெற்றுவருகின்ற சர்வதேசப்பரிமாணத்தின் ஒரு வெளிப்பா டாகவே இதனைக் கருதவேண்டியுள்ளது.

இனப்பிரச்சனையின் அடுத்த பரிமாணமாக இதுவே அமையப் போகின்றது. இரு தரப்பினரது அரசியல் பிரலாபத்தின் வெளிப்பாடே இது!

பேச்சுவார்த்தைகள் தொடரும்போது இந்த அடுத்த பரிமாணத்தில் இருந்து கொண்டே இதனைத் தொடர முடியும். கடந்த காலங்களில் தமிழர் பிரச்சனையை இலங்கை அரசு தவறான முறையில் கையாண்டுள்ளது என்பதைப் பல நாடுகள் ஏற்றுக் கொண்டுள்ளன. இதனால் ஒரு சர்வதேசக் கண்காணிப்பின் கீழ் பேச்சுவார்த்தைகளை நடத்துவது சிறுபான்மையினருக்குப் பாதுகாப்பானதாக அமையும் என்பதும் உண்மைதான்.

இது ஒரு உள்நாட்டுப் பிரச்சனை என்றே இதுவரை கூறப்பட்டுவந்தது. ஆனால் இப்போது முதன்முறையாகச் சர்வதேச மட்டத்திற்குக் கொண்டு செல்ல சனாதிபதி முன்வந்துள்ளார். இப்புதிய பரிமாணத்தை அவரும் ஏற்றுக் கொண்டுள்ளதையே இது வெளிப்படுத்துகிறது.

இந்நிலையில் அடுத்த கட்டப்பேச்சின் செல்நெறி என்ன? என்ற கேள்வி எழுகின்றது.

மூன்றாம் கட்டப் பேச்சின் முட்டுக்கட்டைகளை நீக்காமல் நாலாம் கட்டப் பேச்சுவார்த்தைகளுக்குச் செல்ல முடியாத நிலை உள்ளதைக் கடந்தவாரம் குறிப்பிட்டிருந்தோம். இதில் இரண்டுவிதமான போக்குகள் உள்ளன. அரசியல் திட்டத்தின் அடிப்படையிலேயே பேச்சுவார்த்தைகள் நடைபெற வேண்டும் என அரசு வலியுறுத்துகின்றது. நடைமுறைப் பிரச்சினைகளுக்கே முதலில் தீர்வு காணப்பட வேண்டுமெனப் புலிகள் வலியுறுத்துகின்றார்கள்.

இந்த முரண்பாடு எதிர்காலப் பேச்சுவார்த்தைகளையே கேள்விக்குறியாக்கியுள்ளது.

அரசாங்கத்தைப் பொறுத்தவரையில் அரசியலமைப்பையே மாற்றியமைப்பதில் அது உறுதியாகவுள்ளது. அதேவேளையில் இனப்பிரச்சினைக்கான தீர்வொன்றையும் அதனுடன் இணைந்ததாக முன்வைப்பதே அரசின் நோக்கமாகவுள்ளது.

ஆனால் இதற்குக் காலம்செல்லும், அல்லது சாத்தியமாகாது எனப்புலிகள் கூறுகின்றார்கள். அதனால்தான் உடனடிப் பிரச்

சனைகளுக்கான தீர்வை அவர்கள் முதலில் வலியுறுத்துகின்றார்கள்.

இந் நிலையில் ஒரு யதார்த்தையும் நாம் புரிந்து கொள்ள வேண்டும். பாராளுமன்றத்தில் பொதுஜன முன்னணிக்குப் பெரும்பான்மை இல்லை. ஐ. தே. க வின் ஆதரவின்றி எந்த வொரு அரசியலமைப்பு மாற்றத்தையோ இனப்பிரச்சனைக் கான தீர்வையோ அவர்களால் கொண்டுவர முடியாது. எந்த அரசியல் கட்சியும் தமது கட்சி நலன்களுக்கே முன்னுரிமை கொடுக்கும். எனவே, ஐ. தே. க. என்ன செய்யும் எனபதை இப்போது கூற முடியாது.

இதன் அடிப்படையிலே புலிகள் தமது கோரிக்கைகளை முன் வைக்கின்றனர்.

## ராணுவ முஸ்தீபு

அரசியல் ''தீர்வு'' ஒன்று சாத்தியமாகாவிட்டால் இராணுவத்தீர்வொன்றையே நாட வேண்டியிருக்கும். இதற்குத்தயார் நிலையில் படைகளை வைத்திருக்க வேண்டும் என்பதே இராணுவத்தின் நிலைப்பாடு இந்நிலைப்பாட்டையே சனாதிபதியும் பிரதிபலித்துள்ளார்.

குடாநாட்டின் கழுத்தை நெரிப்பது போல இராணுவ முகாங்கள் அமைக்கப்பட்டுள்ளன. குடாநாட்டைக் கைப்பற்றுவதை நோக்கமாகக் கொண்டே இவை இவ்வாறு வைக்கப்பட்டுள்ளன. குடாநாட்டைக் கைப்பற்றும் நோக்கம் தமக்கு இல்லை என்பதை வெளிப்படுத்தவாவது பூநகரி முகாமை அகற்றுங்கள் என விடுதலைப் புலிகள் கூறுகின்றார்கள்.

குடாநாட்டைக் கைப்பற்றுவதற்கான ஐந்து முனைத்தாக்குதல் திட்டமொன்றைத் தானே தடுத்து நிறுத்தியதாக சனாதிபதி கூறியிருக்கின்றார். இராணுவ முனைப்புக்களின் மூலம் பிரச்சனையைத் தீர்க்க முடியாது. என்பது கடந்த காலங்களில் தெளிவாகவே நிரூபிக்கப்பட்டது. எனவே குடாநாட்டைக் கைப்பற்றும் நோக்கம் தமக்கு இல்லை எனின் இராணுவ நடவடிக்கையில் தமக்கு நம்பிக்கை இல்லை என்றால் பூநகரியை விட்டு இராணுவத்தை வெளியேற்ற அரசு ஏன் தயங்க வேண்டும்.

அல்லது இதன்மூலம் ஒரு பேரம் பேசும் பலத்தைப் பேணு வதற்கு அரசு விரும்பினால் தமிழர்களுடைய உரிமைகளை வழங்குவதற்காக பேரம் பேசலாகவே அது அமையும்.

எனவே, ஒரு அரசியல் எல்லையில் நின்று விடுதலைப் புலி களுடன் பேச்சுவார்த்தைகளை நடாத்துவதா அல்லது இரா ணுவ அடிப்படையில் நின்று இதனை மேற்கொள்வதா என்ப தனையே அரசு இன்று தீர்மானிக்க வேண்டியுள்ளது.

அடுத்த கட்டப் பேச்சுவார்த்தைகள் இதன் அடிப்படை யிலேயே அமையும்.

— மாதொருபாகன்

# கடலில் இராட்சத விலங்குகள்

மிருக இராஜ்யத்தில் பாலூட்டி இனங்களில் ஆகப் பெரிதானவை நீல திமிங்கிலங்களாகும். நீளத்தில்20 அடி வரை இருக்கும். இவைகள கிட்டத்தட்ட 02 தொன் நிறை கொண்டுள்ளதாக இருக் கும். இவைகள் பார்வைக்கு பயங்கரமாகத் தோன்றினாலும் மேன்மையுடையவைகளாகவும் இயல் நலமுடையவைகளாகவும் இருக்கின்றன. இந்த விலங்குகள் நீரில் எழும்பிப் பாய்வதையும் நீரைச் சிதறச் செய்வதையும் பார்த்தால் நேர்த்தியான காட்சி யாகத் தெரியும். இதை அவை வழக்கமாகச் செய்து வருகின்றன.

திமிங்கிலங்களில் பல வகையுண்டு. இவற்றுள் ''கிஸலர் வற்ஸ்'' (அதாவது கொலை செய்யும் திமிங்கிலம்) என்று அழைக்கப்படும் திமிங்கிலங்களே மிகவும் வேகமாக நீந்துபவை. மற்றவற்றுடன் ஒப்பிடின் இவைகள் வேறாகத் தோன்றுகின்றன. இவைகள் வெள்ளை, கறுப்பு நிறங்களையுடையவை. இவ்வகைத் திமிங்கிலங்கள் கடல் நாய்களையும் கடல் பன்றிகளையும் உண் ணும். இதனை ஏனைய திமிங்கிலங்கள் செய்வதில்லை.

இதனை மனிதர் எண்ணைக்காகவும் தோலுக்காகவும் வேட் டையாடுவது மிகவும் துக்கத்திற்குரிய விடயமாகும். இதனை யடுத்து இவ்வினம் முற்றாகவே அழியும் நிலை ஏற்படலாம்.

(சண்டே ரைம்ஸ் 15.01.95)

''போரினால் அழிந்து சின்னாபின்னமாக்கப்பட்ட இந்த நாட்டில் அதிகாரப்பரவலாக்கல் தீர்வாக அமையலாம் எனக் கருதப்படுகின்றது''.

# சமஷ்டி அரசியல் முறை

அரசுக்கும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் இடையேயான அமைதிப் பேச்சுவார்த்தைகள் தொடரும் இவ்வேளையில் அதிகாரப்பரவலாக்கல் பற்றிய கேள்விகள் எழுப்பப்பட்டு வருகின்றன. அரசியல், சர்வகலாசாலை மட்டங்களில் இன்று கலந்துரையாடப்பட்டு வரும் விருப்பத்துக்குரிய விடயங்களில் ஒன்று சமஷ்டியாகும். சனாதிபதி வழக்கறிஞரான எச். எஸ். த. சில்வா அவர்களின் கைநூலில் இருந்து இன்றுசில சுருக்கக் குறிப்புகளை நாங்கள் வெளியிடுகின்றோம். ' சிறிலங்காவுக்கு சமஷ்டி பற்றிய மதிப்பீடு'' என்னும் பெயருடைய இச்சிறுநூல் 1991ஆம் ஆண்டில் பிரசுரிக்கப்பட்டதாகும்.

சிறீலங்காவின் இனப்பிரச்சனையைத் தீர்க்கும் வழியாகச் சமஷ்டிமுறையான அரசியலமைப்பே மறுமலர்ச்சியூட்டக் கூடியதென்றும் ஆர்வம் தற்போது நிலவி வருகின்றது. பிரிவினைவாதத்தின் ஒரு முறியடிப்பு (மாற்று) முறையே சமஷ்டி அரசியலாகும்.

பலஇனச் சமூகத்தில் வழமையாக இருக்கும் இயற்கையாக இருக்கும் இயற்கையான பிரிவினைவாதப் போக்கை சமஷ்டி முறையான அரசு நீக்கிவிடும் என்றும் எண்ணம் அதிகமாக காணப்படுகின்றது. அதற்குப் பரிகாரங்கள் காணப்படாவிடின் தவிர்க்கமுடியாமல் இது பிரிவினைவாதத்திற்கு வழிவகுக்கும். எனவே, நான் சுருக்கமாக சமஷ்டிக்கு ஆதரவைத் தரும், தத்துவரீதியான வாதத்தை முன்வைக்கின்றேன். இதில் காணப்படும் எல்லாம் சமரீதியான வசீகரத்தன்மையுடன் தோற்றமாட்டாது. ஏனெனில் சிறீலங்காவின் அரசமைப்புடன் அவை பரிசீலனை செய்யப்படவேண்டிய விடயங்களாகும்.

இன்றைய உலகில் சர்வதேசத்தினரும் இந்தப் பிரச்சனைகளுக்கு முக்கியத்துவம் கொடுத்து வருவதினால் சமஷ்டி என்பது ஒரு சட்டபூர்வ ஒழுங்கு முறையெனவும் தன்னாட்சிபெற்ற ஒரு நாட்டில் தொடர்ச்சியான விசுவாசம் கொண்டுள்ள ஒரு குடிமகனுக்கு, அவனது பெருந்தன்மைக்கு ஏற்ப தனி அரசொன்றில் விசுவாசத்தை ஏற்படுத்துவதாகவும் முதலில் இது விவாதிக்கப்பட்டது. பலமிக்க சமஷ்டி அமைப்பில் ஒருகுடிமகனாக இருந்து அதன் பாதுகாப்புகளை அனுபவித்து வருவதனால் அதன் குடிமக்களுக்கு உயர்வானநிலையை இந்த அமைப்பு கொடுக்கின்றது. அத்துடன் சர்வதேச அரங்கில் அது உண்மையான நன்மைகளையும் முன்னேற்றத்தையும் கொடுக்கின்றது. ஆனால், இங்கு கூறப்பட்ட உரிமைகளுக்கான முன்னேற்றம் உண்மையில் சமஷ்டி குணாதிசயங்களில் மட்டும் தங்கியிருக்கவில்லை. ஆனால் இது சர்வதேசச் சமுதாயத்தில் சமஷ்டி அரசினால் அதிகாரம் செலுத்தப்படும்சக்தி, செல்வாக்கு என்பவற்றின் முடிவுகளாகும். அததகைய அரசொன்றின் குடிமக்களிடமிருந்து வரும் நன்மைகள் புதிய சுதந்திர நாடாகப் பிரிந்துவாழ்வதற்குப் பதிலாக சமஷ்டி அமைப்பின் மூலம் தொடர்ந்து வாழ்வதற்கான உந்துசக்தியைக் கொடுக்கின்றன. வேறுவார்த்தைகளில் சொல்வதானால் சமுதாயரீதியிலான தேசிய அரசின் செல்வாக்கு மிக்க சக்தியாக விளங்கும். சமஷ்டி அமைப்பொன்றில் உறுப்பினராக இருக்கும் முன்னேற்றத்தினால் ஒற்றையாட்சியிலுள்ள உபதேசியக் குழுவொன்று உள்ளக செல்வாக்கின் மூலம் தனது குறைபாடுகளை இழப்பீடு செய்யமுடியுமா என்பதில் தான் தங்கியுள்ளது.

இரண்டாவதாக, ஒரு சமஷ்டிக் கட்டமைப்பு பலதுறைகளிலும் இருக்கும் வேறுபட்ட பிரதேச அமைப்புக்களுக்கிடையே ஒரு உள்ளகக் கூட்டுறவைச் சாத்தியமாக்கின்றது. இவ்வாறாக

எல்லாப் பிரதேசங்களிலுமுள்ள குடிமக்களின் பொதுவான நலன்புரி வேலைகளின் முன்னேற்றத்திற்காகவும் உதவுகின்றது. ஆனால் வேறுபட்ட சுதந்திர அரசுகளாகவிருந்தால் அவை முழுமையாகத் தமது சொந்த நலன்களிலேயே கவனம் செலுத்துவதினால் இவ்வாறான நலன்கள் கிடைக்கமாட்டாது.

எவ்வாறாயினும், ஒத்துழைப்புகளும் பரஸ்பர உதவிகளும் ஒவ்வொரு சமஷ்டி அமைப்பிலும் கட்டாயமாக இருக்கவேண்டுமென்பதல்ல என்பதை இங்கே சுட்டிக் காட்டுவது அவசியமாகின்றது. ஆனால் நம்பிக்கை, நல்லெண்ணம், சுயநலவிளக்கங்கள் போன்ற வேறு காரணிகளால் இது தோற்றுகின்றது. வேறு விதமாகக் கூறுவதானால் ஒரு சமஷ்டி ஒழுங்குமுறையின் வெற்றியோ தோல்வியோ, பலமோ, பலவீனமோ புவியியல் அமைப்பிலும் பௌதீகக் காரணிகளிலுமே தங்கியுள்ளது. இவை பிரதேச அமைப்புக்கள் சனத்தொகைப் பங்கீடுகள் பொருளாதார வழிமூலகங்கள் ஆகிய இன்னோரன்னவற்றை எல்லாம் பாதிக்கின்றன. இவை தமக்குள்ளாகவே சமஷ்டி அரசின் வெற்றிகரமான வேலைகளுக்குத் தேவையான ஒத்துழைப்பையும் உள்ளக ஆதரவுக்கான தன்மைகளையும் உருவாக்கி விருத்திசெய்கின்றன. எனவே, இருக்கக்கூடிய ஒற்றையாட்சி அரசியலமைப்பில் இக்குறிப்பிடக்கூடிய காரணிகள் இருப்பது வெறுப்பையூட்டுவதாக இருந்தால் ஒன்று சேர்க்கும் நோக்கமான நல்லெண்ணமும், உள்ளக நம்பிக்கையுணர்வும் இல்லாதிருக்கும். ஒரு சமஷ்டி அமைப்பின் கீழ்அவற்றின் முன்னேற்றத்துக்கான நம்பிக்கையும் பயனற்றதாகிவிடும்.

மறுபக்கத்தில் பார்க்கும்போது முன்வந்திருக்கும் உள்ளக இன வேறுபாடுகளும், போட்டிகளும் அதிகரித்துப் பிரிவினைவாதத்துக்கு வழிவகுப்பதை இணையாகச் சாத்தியமாக்குகின்றன. எல்லாவற்றுக்கும் மேலான இந்த ஆர்வங்களும், தேசிய அனுகூலங்களை உண்டாக்குமெனப் பொதுவாகக் கருதப்படுபவைகளும் ஒரு பிரதேசத்தின் உரிமைகளுக்கும் கோரிக்கைகளுக்கும் மேல் வியாபித்திருப்பது மட்டும் முக்கியமல்ல. அவற்றின் தனித்துவமான பெறுமதிகளின் அங்கீகாரங்களும், பரந்தளவிலான பாராட்டுக்களும் அவற்றின் அளவிட முடியாத முக்கியத்துவங்களும் சமஷ்டியின் வெற்றிக்கு முக்கியமானவையென்பதால் சமஷ்டி ஒழுங்குமுறை மூலம் ஆளப்பட வேண்டியவர்கள் அவற்றைப் புரிந்து கொள்ளுதல் வேண்டும்.

மூன்றாவதாக, சமஷ்டி அரசியலமைப்பின் சிறப்பியல்புகளைக் கொண்ட அரசியல் அதிகாரங்களின் அதிகாரப் பரவ

லாக்கங்களும், பகிர்ந்தளிப்புக்களும், சனநாயக முறையான அர சொன்று அமைவதற்கு வழிவகுக்குமென விவாதிக்கப்பட்டது. அதிகாரங்கள் ஒருங்கிணைந்து ஒரு தனி மத்திய நிலையத்தி லிருந்து சுதந்திரத்திற்கான பயமுறுத்தல்களையும் எதேச் சதிகாரத்தினால் உண்டாக்கும் அபாயங்களையும் குறைவடை யச் செய்கின்றது. தீர்மானங்களை மேற்கொள்வதிலும், அர சின் உண்மையான வேலைகளில் பங்கு பற்றுதலிலும், புவியியல் ரீதியில் பிரிக்கப்பட்ட தேசிய பிரிவுகளுக்கிடையேயான நிர்வா கங்களில் பங்குகொள்வதிலும் உயரிய சந்தர்ப்பங்களை வழங்கு கின்றது. இல்லாவிடில், அவர்களுக்கான இந்த உரிமைகள் மறுக்கப்பட்டுவிடும். அவ்வாறே சனநாயகத்தில் பங்குகொள் பவர்களின் உயர் இலட்சிய விருத்திகளுக்கு உதவியளிக்கும். அபி விருத்தியடைவதற்கான வேற்றுமைகளுக்கு இடமளிப்பதன்மூல மும் அவற்றின் சுய நிறைவுக்கான சந்தர்ப்பங்களை வழங்குகி றது. நாட்டிலுள்ள வேறுபட்ட சமூகங்களை நினைவில் கொள்ள வேண்டிய குழுக்களின் பாதுகாப்பிற்கும் உதவுகிறது. வேறுபட்ட குழுக்களுக்கிடையே பரிசோதனைகளுக்கும், புதுமைகளைப் புகுத் துவதற்கும் அவற்றிற்கே உரிய திறமைகளிலும் சாமர்த்தியங்களி லும் அக்கறை கொள்வதற்கும் சந்தர்ப்பங்களை கொடுத்து அவற் றின் மூலம் முழுநாடுமே நன்மைகளை அடையச் செய்கின்றது. ஆனால் இந்த விவாதத்திற்கான விடை அதிகாரப் பரவலாக் கலும், பகிர்ந்தளிப்பும சமஷ்டி ஒழுங்கு முறைக்கான தனித் தனி அமைப்புகளல்ல எனவும், தனிநாட்டு ஒழுங்கு முறையின் கீழ் தான் இவை நன்கு சேர்ந்திருக்கக் கூடியன எனவும், மற்றக் காரணிகள் இல்லாதுவிடத்து சமஷ்டிக்கான போதிய நியா யத்தைத் தரமாட்டாதெனவும் சொல்லலாம்.

சமஷ்டி ஒழுங்கு முறையான அரசை ஆதரிப்பவர்கள் அதுவே தனிநாட்டில் அதிருப்தியடைந்துள்ள சிறுபான்மையி னருக்கு வழங்கக்கூடிய சிறந்த மாற்றாகும்மெனக் கூறுகின்றனர். பெரும்பான்மையினரின் கையிலுள்ள ஆட்சியில் அத்தகைய சிறு பான்மையினருக்கு பிரதேச சுயாட்சியை வழங்குதல் எந்தக் கவனமும் ஈர்க்கப்படாத அல்லது போதிய கவனம்செலுத்தப் படாத அவர்களின் பிரச்சினைகளைத் தீர்க்கக் கூடிய சந்தர்ப் பத்தை அது அவர்களுக்கு வழங்குமென விவாதிக்கின்றனர்.

பிரதேச சுயாட்சி வழங்கப்பட்டால் அது பிரிவினைவாதத் திற்கு உந்து சக்தியைக் கொடுக்கமாட்டாதென்பதுடன் உள்ளகச் செயல்ப்பாடுகளுக்கான பொறுப்பையும் அவர்களை ஏற்றுக் கொள்ளச் செய்யும். ஒவ்வொரு பிரதேசப் பிரிவுகளுக்குமான பரஸ்பர சுய ஆர்வம் மத்திய அரசுடன் ஒத்துழைப்பதற்கான

சம்மதத்தைக் கொடுக்கும். அதன்மூலம் வேறுபட்ட இணைப்புகள் ஊடாக ஒரே இயல்பற்ற மக்களைத் தேசிய ஒற்றுமைக்கு ஊக்கிவித்து அவர்களை ஒன்றிணைக்கும் என்பதே வாதமாக இருந்தது.

ஆனால் இந்தக் கோரிக்கைக்கு எதிரான மற்றவர்களும் இருக்கிறார்கள். உண்மையில் சிறீலங்காவில் சமஷ்டி யோசனைக்கான ஆரம்ப எதிர்ப்பு, சமஷ்டிக் கட்ட அமைப்பின் உருவாக்கம் பிரிவினைவாத இயக்கத்துக்கு ஊக்கத்தைக் கொடுத்து அவர்களை விருத்திசெய்யும் என்னும் நம்பிக்கையுடன்தான் தடுக்கப்பட்டது. சமஷ்டியினுள் எந்தப்பிரதேசப் பிரிவும் அரசு என்னும் நிலைக்குச் சம்மதிக்கப்பட்டால் தனி அரசுக்கான கருவை அது கொடுக்கும் என உரைப்பட்டது. இது முற்றாகப் பெரும்பான்மைச் சமூகத்தவரின் ஒருவகையான நியாயம் அற்ற பயம் எனக்கூற முடியாது. இது நோட்லிங்கர் போன்ற அரசியல் தத்துவஞானிகள் சிலரின் எழுத்துக்குறிப்புகளிலிருந்து எடுக்கப்பட்டிருக்கலாம். ''ஒரு ஆதிக்கத்திற்குட்பட்ட நிலப்பரப்பின் முற்றிலும் வேறாகப் பிரிக்கப்பட்ட ஒரு பகுதியின் இணைப்பும், சமஷ்டியும்' சில வேளைகளில் 'பகுதிவாரியான தனியாட்சியும்'' பெரும் தன்னாட்சிக் கோரிக்கைக்கான மேலதிக உந்து சக்தியைக் கொடுக்கும். இந்தக் கோரிக்கைகள் மறுக்கப்பட்டால் ''பிரிவினைவாதமும் உள் நாட்டுப் போரும் தொடரும்'' என நோட்லிங்கர் கூறியுள்ளார். (பிரிக்கப்பட்ட சமூகங்களிலிருந்து முரண்பாட்டுக்கான விதிகள்).

சமஷ்டியைத் தனியாகக் கருதி வாதாடுவதில் இயற்கையாய் அமையப்பெற்ற தூய்மைகள் இருப்பதால் மொத்தத்தில் இது ஒரு மிக இலகுவான விடயமாகும். இன்னும் சரியாகத் தீர்மானிப்பதானால் சமஷ்டியில் வெற்றியோ தோல்வியோ வேறு பல காரணிகளும் தங்கியுள்ளதாக வரலாறு காட்டுகின்றது. நான் ''உயர் தேசியம்'' எனக் குறிப்பிட்டிருந்தவற்றை இது உறுதிசெய்கின்றது. தேசிய பேராபத்துக்கு இறுதியில் வழிவகுக்கும் குறுகிய கால முன்னேற்றங்களால் மக்கள் ஏமாற்றம் அடைவதைப்பார்க்கிலும் நல்லெண்ணம், சகிப்புத் தன்மை, விட்டுக் கொடுத்தல் என்னும் இயற்கைச் சக்திகளுடன் மக்கள் ஒருங்கிணைந்து வாழலாம்.

## ஒற்றையாட்சி அரசியலமைப்பில் அடைய முடியுமெனக் கூறப்படும் அனுகூலங்கள்

சமஷ்டி அரசியலமைப்பில் அனுகூலமான போட்டிகள் மதிப்பீடு செய்யும் இந்நிலையில் ஒற்றையாட்சி அரசிற்கு அனுகூல

மான சிலவற்றையும் அவற்றுடன் இணைந்த மட்டுப்படுத்தல் களையும் சுருக்கமாகக் கவனித்தல் நன்மை பயக்கும். மூன்றாம் உலகின் பகுதியாகிய தேசங்களைச் சேர்ந்த இச்சிறு அரசுகள் அவையிருக்கும் நிலையில் போதிய அளவு கவர்ச்சிகரமாகத் தோன்றுகின்றன. இவை குறைவடைந்த மூலகங்களுடனோ அல்லது விருத்தி செய்யப்படாமலோ சனநாயக சுதந்திரத்தைப் பாதுகாப்பதற்காகவும் சிறந்த குறிக்கோள்களுக்காகவும் கஷ்டப் பட்டு முயற்சி செய்து கொண்டிருக்கின்றன. எவ்வாறாயினும் அவை எச்சரிக்கையாக இருப்பதுடன் அவற்றின் பெறுமதிக்குத் தக்கபடி ஒரே சமூகத்தில் தொடர்ந்திருப்பதற்கான முக்கிய எண்ணங்களை அல்லது வர்ணனையற்ற வேற்றியல்புகளையும் வேறுபட்ட ஆர்வங்களையும் கொண்ட ஒற்றுமை காணமுடியாத சமூகத்தில் வாழ்கின்றன.

ஒற்றையாட்சி அமைப்பிற்கு ஆதரவான விவாதங்களை முதலில் பார்ப்போம். திறமைக்கும் விரைவான செயல்பாடு களுக்கும் உதவும் பிரதான காரணியான தொழில்களின் ஒருங் கிணைந்த நிர்வாகமே நவீன உலகிலுள்ள அரசுகளின் தலை யாய பண்புகளாகும். பெரும் பகுதிகளுக்கு நீடிக்காத நட வடிக்கைகளில் ஒன்றொடொன்று இணைந்த செயல்பாடுகளும் சீரான தோற்றமுமே சாத்தியமானதும் உபயோகிக்கக் கூடிய துமாகும். அரசாங்கத்தின் குறிப்பிட்ட பகுதிகளிலுள்ள தனி மத்திய நிலையங்களிலிருந்து வழிகாட்டலும் கட்டுப்பாடுகளும் நேரந்தவறாத, உறுதியான துரிதமான நடவடிக்கைகளை எடுக் கின்றன. அத்துடன் சுற்றுப்புற எல்லைகளிலும் முறையான இணைப்பைத்தருகின்றது. எவ்வாறாயினும் இவை தத்துவ ரீதியி லான கருத்துக்களேயாகும். அரசின் நடைமுறைச் செயல் பாடுகளில் எப்போதும் இதில் வெற்றி காணமுடியாது. இங்கு ஊழியஞ் செய்யும் மக்களின் தரத்தில் தான் செயல்பாடுகள் பெரும் அளவில் தங்கியுள்ளன.

இரண்டாவதாக சமஷ்டி ஒழுங்குமுறை ஒரு சிறிய நாட் டிற்கு அதிக செலவுகளைக் கொடுக்கக் கூடியதும் டாம்பீகமா னதுமாகும். ஒரு ஒற்றையாட்சி ஒழுங்கு முறை தேவையற்ற செலவீனங்களையும் தொடர்ந்து வரும் சேதங்களையும் தவிர்ப்பதுடன் அது நிறுவன இரட்டிப்புச் செலவீனங்களை யும் தடுக்கிறது. இது பிரதானமாக பிரதேச நிர்வாகங்களை உருவாக்கும்போது மேலதிக ஊழியர்களைச் சேர்த்தலையும் அரசின் இயந்திரப் பராமரிப்புகளையும் உள்ளடக்குகிறது. அபிவிருத்தி அடைந்து வரும் உலகிற்கு பொருளாதாரம் பற்றிய எண்ணங் கள் மிக முக்கியமானவையாகும். அத்தகைய நாட்டில்

இரண்டடுக்கு அரசைப் பராமரிக்கும் செலவுகளும் மிக அதிக சுமையானவையாகும். ஒற்றையாட்சி ஒழுங்கு முறையில் அதிகாரப் பரவலாக்கல் மூலமும் பிரதேச அமைப்புகளுக்கான அதிகாரப் பரவலாக்கல் மூலமும் இவை சாத்தியப்படக் கூடியனவாகும். சமஷ்டி இலக்கில் பெருமளவில் வெற்றி பெறுவதற்கு இந்த அதிகாரங்களை அதிகரித்தல் வேண்டும்.

மூன்றாவதாக, நாட்டிலுள்ள எல்லாக் குழுக்களின் அடையாளங்களும் வழமையான உரிமைகளுக்கான மரியாதை, அடையாளங்கள் என்பன கொடுக்கப்பட்டு ஒற்றையாட்சி முறையான அரசு அதிகம் ஒட்டக் கூடிய தன்மைகளில் கொடுக்கிறது. சமஷ்டி அமைப்பிலும் பார்க்க ஒன்றுபடக் கூடிய எண்ணங்களையும் இது அதிகமாகக் கொடுக்கின்றது. பிரதேச விசுவாசங்களுக்கும் இது ஊக்கத்தைக் கொடுப்பதுடன் பிரிந்து செல்லும் சுபாவங்களை இது உறுதிப்படுத்த முடியாத நிலைக்கு இட்டுச் செல்லுகின்றது.

அரசியல் யாப்பின் பதின்மூன்றாம் திருத்தங்களின் பின்னர் சிறிலங்கா அரசு ஒற்றையாட்சி முறையான அரசின் வெளிப்படையான அறிகுறிகளைப் பராமரித்துக் கொண்டு சமஷ்டியின் கொள்கைகளை அனுபவித்து வருவது பற்றி நான் பின்னர் உங்களுக்குக் காட்டுகின்றேன்.

## அரசியலமைப்புத் தத்துவங்களிலிருந்து வேறுபட்ட பயிற்சி முறைகள்

இவை உண்மையில் தத்துவரீதியான சாத்தியக் கூறுகளைக் கொண்டிருந்த போதிலும் இந்தக் குறிக்கோள்களை நடைமுறையில் வெற்றிகொள்ள முடியுமா என்பது வேறொரு விடயமாகும். அரசியலமைப்புத் தத்துவங்களிலிருந்து நடைமுறை வேறுபாடுகளை எடுத்துக் காட்டுவதற்கு சமஷ்டி முறையான அரசின் உண்மையான செயல் பாடுகளைக் கொண்ட ஒரு அரசின் அனுபவங்களை மட்டும் பார்த்தல் வேண்டும். ஒரு சமஷ்டி அரசு பல பிரிவுகளைக் கொண்ட சக்திகளைக் கொண்டிருப்பதற்குப் பதிலாக அவர்களை மேற்பார்வை செய்து ஆதரவைக் காட்டலாம். மற்ற இனப் பிரிவுகளுக்கு இது உந்து சக்தியைக் கொடுத்து அவை சிறியவையாகவும் குறைந்த அளவிலானவையாக இருந்த போதிலும் தமது சொந்த உரிமைகளை அடையாளம் காணும் ஒரு உபதேசிய பிரிவுகளாவதற்கான கிளர்ச்சியைச் செய்யத் தூண்டலாம். பிரிவினைவாதப் பயமுறுத்தல்களுடன் அந்த சமஷ்டி அமைப்பினுள் அரசியல்

நிர்ணய அதிகாரங்கள் ஒத்திருப்பதற்கு நிர்ப்பந்திக்கலாம். இந்தியாவின் அனுபவங்கள் இதை உறுதிப் படுத்துகின்றன. இந்திய அமைப்பில் அரசியல் நிர்ணய உரிமை உருவாக்கப்பட்டபோது மொழிவாரிப் பிரதேசங்களை ஏற்றுக் கொண்டிருப்பது பல வருடகாலமாக பிரதேசங்களில் மிகப்பெரிய இடங்களைக் கொண்டிருந்த பெருமதிமிக்க மொழி சம்பந்தமான குழுக்களுக்கும் அவ்வாறான தரங்களைக் கொடுக்க வேண்டியதாயிற்று. 1956ஆம் ஆண்டில் இந்தியாவின் 14 மாநிலங்களே இருந்த போதிலும் இன்று 25 வரையான பிரதேசங்களைக் காணக் கூடியதாக இருக்கின்றது. பின்னர் உருவாக்கப்பட்ட மாநிலங்கள் ஆந்திரப் பிரதேசம், மஹாரஷ்ரா, குஜராத், ஹிமாசல், நாகலாந்து, மணிப்பூர், திரிப்புரா, அருணாசல் பிரதேசம், மிசோரம், கோவா என்பவைகளாகும்.

சிறிலங்காவில் சமஷ்டி அமைப்பை நிறுவி இனப்பிரச்சினைக்கு பிரிவுகளை உண்டாக்க ஒருவர் எண்ணும்போது முஸ்லிம்கள், தமிழர்கள், மலைநாட்டில் வாழும் இந்திய அடிப்படையைக் கொண்டு அண்மையில் வந்தவர்கள் ஆகியோருக்கான பிரதேசங்களை உருவாக்கும்போது, எதிர்காலத்தில் கிளர்ச்சி ஆபத்துக்களை எதிர்நோக்க வேண்டியிருக்கும் என அவர் கருதலாம். மொழிவாரியான கொள்கைகளை அடையாளங்காணல், இனவாரியான பிரச்சினைகளை அடிப்படையாகக் கொண்டு ஒரு சமஷ்டிக் கட்டமைப்பை ஏற்படுத்துதல் அத்தகைய பிரிவுகள் அதிகரிப்பதையோ அல்லது இனங்கள் பரவுவதற்கோ வழிவகுக்கும். இது நாட்டின் உறுதியைக் குலைக்கும். அதுவே பிரதேச உருக்குலையா நிலையின் முடிவாகும்.

## சிறிலங்கா மத்திய அரசின் பாரம்பரியம்

ஸ்ரீலங்காவின் சமஷ்டிப் பரிசோதனையில் வெற்றியோ தோல்வியோ பற்றிய நிகழ்வை ஒருவர் கருதும்போது அதன் மத்திய அரசை நோக்கிய நீண்டகாலக் கடும் போக்கை ஒருவர் எண்ண வேண்டியிருப்பது மற்றொரு விடயமாகும். சமஷ்டி எண்ணத்தை உடனடியாக ஏற்பதை இதுவும் எதிர்க்கின்றது. 1815ஆம் ஆண்டிலிருந்து மத்திய அரசின் கடும் பாரம்பரிய நிலைமைகள் இருந்து வந்தபோதிலும் பிரித்தானியர் அதிகாரங்களைக் கைவிட்டுச் சென்ற ஸ்ரீலங்காவிற்குச் சுதந்திரம் கிடைத்தபோது இந்தப் பிரச்சனையைப் பற்றி எவரும்கேட்க முன்வரவில்லை. முன்னாள் பிரதமரான திரு. எஸ். டபிள்யூ. ஆர். டீ. பண்டாரநாயக்கா தனது அரசியல் வாழ்வின் ஆரம்பத்தில் சமஷ்டியை ஆதரித்து

ஒரு தனி உரையாற்றியது பற்றி யாரும் முக்கியத்துவம் கொடுத் திருப்பார்கள் என்பது பற்றியும் நான் எண்ணவில்லை. அல்லது சில ஆர்வமுள்ள கண்டிய பிரதிநிதிகள் பரவலாக எண்ணியிருந் ததற்கு ஆதாரமான சமஷ்டி மறைபோன்ற அரசை டொனமூர் ஆணைக்குழுவின் முன் பிரேரித்திருப்பார்கள் என்றும் எண்ண வில்லை. பொதுவாகக் கண்ணுக்குத் தோற்றக் கூடியதாக இருந்த ஒரு சில பிரதிநிதிகளே 40ஆம் ஆண்டுகளில் சிறிலங்கா, இந்திய சமஷ்டியாட்சியின் ஒருபகுதியாக இருக்க வேண்டுமெனக் கருதிய சனாதிபதி ஜே. ஆர். ஜெயவர்த்தனாவின் எண்ணங் களை ஆதரித்தனர். இவை தனிப்பட்ட எடுத்துக்காட்டுக்கள் என்பதால் பொதுவான நடைமுறைகளில் அவை பிரதிபலிக்க வில்லை.

தமிழர்களால் சமஷ்டி அரசியலமைப்பை ஆதரித்த அரசியல மைப்புச் சீர்திருத்தங்கள் சோல்பரி ஆணைக்குழுவின் முன் னால் கூட எடுத்துக்கூறப்படவில்லை. அந்நாட்களில் பிரதான அரசியல் கட்சியாக இருந்த தமிழ் காங்கிரஸ் கட்சியினர் சட்ட சபையில் சமத்துவ பிரதிநிதித்துவமூலம் சிறுபான்மையினரின் நலன்களைப் பாதுகாப்பதற்காகத் தமது ஆர்வங்களைக் காட்டி னர். இந்தியாவின் சுதந்திரத்துக்கான கிளர்ச்சிகளில் அபிவிருத்தி காணப்பட்ட போதிலும் மத்திய ஒழுங்கு முறையுடன்கூடிய அர சின் ஆபத்துக்களை இவர்கள் எதிர்த்து நின்றனர்.

## சமஷ்டி அமைப்பின் மத்திய கட்டுப்பாடு சிக்கல்கள்

பிரிவினைவாதப் பிரச்சினையின் இறுதித்தீர்வு எப்போதுமே சமஷ்டியாக இருக்கமாட்டாதென்பதை இந்திய அனுபவங்கள் எடுத்துக் காட்டுகின்றன. அரசியல் யாப்பை அமைக்கும்போது உண்மையில் என்ன நடைபெற்றதென்றால் நாட்டின் பிரிவி னைக்கு உண்மையான அச்சுறுத்தல்கள் காணப்பட்டால் உண் மையான சுயாட்சியைக் கஷ்டங்களுடன் எப்போதுமே இணங்கு தல் வேண்டும்.

மறுபக்கத்தில் புறம்பான நாட்டிற்கான உறுதியான கோரிக்கை எதிரான போக்குகளைத் தருவதுடன் மத்திய அர சின் அதிகாரங்களையும் அதிகரிக்கத் தூண்டும். பிரிவினை என்றும் அதிர்ச்சியுடன் இந்தியாவில் பாகிஸ்தான் நாட்டிற்கான அதிகாரங்கள் உருவாக்கப்பட்டபோது பலவீனங்கள் அதிகரித்து மத்திய அரசுக்கும் பிரதேசங்களுக்கும் இடையேயான கருத்து வேற்றுமைகள் அதிகரித்தன.

பல சந்தர்ப்பங்களில் மத்திய அரசு தலையிட்டு இந்திய அரசியல் யாப்பின் 356ஆம் சரத்துகளின் கீழ் உள்ளூர் சுயாட்சிகளை இடைநிறுத்தஞ் செய்வதற்கு சனாதிபதி ஆட்சிமுறையைப் பிரகடனப்படுத்தியதிலிருந்து இதைத்தெளிவாகக் காணக்கூடியதாக இருக்கின்றது.

எந்தச் சந்தர்ப்பத்திலும் மத்திய அரசு தமக்கெதிரான கட்சிகளின் அரசியல் செல்வாக்கையும் சக்தியையும் பறித்துத் தம்முடன் இணைத்துக் கொள்வதற்கோ அல்லது ஒரு அரசமைப்பை அமைக்கும்போது உத்தரவுகளை பிறப்பிப்பதற்கோ அல்லது அத்தகைய நோக்கங்களுக்காக ஒருகூட்டு ஒழுங்குமுறைக்குச் செல்வதற்கோ இந்திய அரசியலமைப்பின் இந்த நிபந்தனைகள் நாடப்பட்டு வந்தது வெளிப்படையாகும்.

ஸ்ரீலங்காவின் உள்ளூராட்சி முறையில் இது தெரியாத அபிவிருத்தியொன்றல்ல. இங்கு உள்ளூர் ஆட்சியிலுள்ள அதிகாரிகள் அரசுடன் பகைமையுள்ளவர்களாக இருந்தால் அவற்றின் ஒழுங்கற்ற நிர்வாகம், தகுதியற்ற தன்மைகள் என்னும் குற்றச்சாட்டுகளின் பேரில் ஆட்சியிலுள்ள அரசினால் அந்த மன்றங்கள் கலைத்து விடப்படுகின்றன.

எனவே, சமஷ்டி முறையான அரசை ஒருவர் ஆழ்ந்து சிந்திக்கும்போது பின்பற்ற வேண்டிய அரசியலமைப்பு வடிவமைப்புக்களுக்கு எதிராக இருபோக்குகள் இருப்பதைக் காணலாம். ஒருபக்கத்தில் முழு மூச்சுடன் சமஷ்டியை விரும்புபவர்கள் எல்லாவிதமான மத்திய கட்டுப்பாடுகளை நீக்கிவிட விரும்புவதைக் காணலாம். மறுபுறத்தில் பிரிவினைவாதத்தின் பக்கம் நழுவிவிடுமென்ற கவலையுள்ளவர்கள் மத்திய கட்டுப்பாட்டின் தொழில் நுட்பங்களுக்கு ஆதரவாகப் பேசுவதைக் காணலாம். உதாரணமாக, 13வது திருத்தத்தின் கீழ் (கட்டுப்பாடு 154) அரசியலமைப்புச் சரத்துக்களுடன் அதற்கு இணக்கமான முறையில் மாகாண நிர்வாகத்தை நடத்த முடியாத நிலையொன்று தென்பட்டால் அந்த மாகாணத்தின் நிர்வாக வேலைகளைத் தானாகவே செய்வதற்கு சனாதிபதிக்கு அதிகாரமளிக்கப்பட்டுள்ளது. இந்திய அமைதிகாக்கும் படையினர் வாபஸ் பெற்ற பின்னர் வடகீழ் மாகாணத்தின் நிர்வாகத்தில் அதிகார வீழ்ச்சி காணப்பட்டதைத் தொடர்ந்து இந்தப்பிரிவின் பிரகாரம் ஏற்கனவே இந்த மாகாணசபை கலைக்கப்பட்டு விட்டது. அரசின் பிரதேச மேன்மை பராமரிக்கப்பட வேண்டுமானால் சிறிலங்காவிற்கான சமஷ்டித் திட்டங்கள் எவற்றுக்குள்ளாகவும் இத்தகைய நிபந்தனைகளைப் பகிர்ந்தளிக்க முடியுமென எதிர்பார்க்க முடியாது.

மக்கள் பாதுகாப்பு விதிகள் கீழ் அவசரகாலச் சட்டத்தைப் பிரகடனப்படுத்துதல் சம்பந்தமான நிபந்தனைகள் மற்று மொரு பிரச்சினைக்கான பகுதியாகும். இந்தியாவிலோ இலங் கையிலோ அவசரகாலச்சட்டம் பிரகடனப் படுத்தப்பட்டிருக் கும் போது மாகாண ஆளுநர்களுக்கு அதிகாரத்தை அமுல் செய்தல் சம்பந்தமாக வழிகாட்டக் கூடிய சட்ட உடன் பாடுகளை சனாதிபதி கொண்டுள்ளார். அத்தகைய வழிகாட் டலைக் கூறியது போல் அவர் செய்யாத இடத்து சனாதி பதிக்கென ஒதுக்கப்பட்ட அதிகாரங்களுடன் அவர் செயற் படலாம். திடமற்ற நிலை தொடர்ந்தும் காணப்பட்டால் பிரதேச சுயாட்சிமுறை கைவிடப்பட்டு மத்திய அரசுக்கு மீண் டும் அறிமுகப்படுத்தப்படுவது தவிர்க்க முடியாததாகிவிடும்.

## சமஷ்டிக்கான முன்நிபந்தனைகள்

ஒரு நாட்டிற்கு சமஷ்டி அரசியலமைப்பை நிறுவுவது அரசி யல் தத்துவஞானிகள் வசதிக்காக அழைப்பதைப் போல ''ஒரு சமஷ்டி நிலைமை'' என முன்னரே எண்ணக் கூடியதாக இருக் கின்றது. இது நாட்டினதும் அத்தகைய அரசியலமைப்பின் மூலம் ஆளப்படும் மக்கள் சம்பந்தமாகவும் வேறுபட்ட உண்மை களையும் சூழலையும் கொண்டு தோற்றுகின்றது.

சாதாரணமாக ஒரு சமஷ்டி நிலைமை இரண்டோ அல்லது அதற்கதிகமான பிரதேசங்களிலோ அல்லது சுதந்திரதேசியத்தின் பெருவிருப்புக் கொண்டு எண்ணற்ற காரணங்களால் சமஷ்டி மூலம் ஒருங்கிணைவதற்கோ அல்லது தமது வேறுபட்ட சட்டப் போராட்டங்களைக் கைவிட்டு ஒருங்கிணைந்து ஒரு தனி அரசை உருவாக்கி ஒன்றிணைந்த பிரதேச வெளிவிவகாரங்களில் பொது வான அரசுரிமையைக் கொண்டோ இருக்கும் மக்கள் சமூகத் தினர் என அடையாளங் காணப்பட்டவர்களோ் உள்ள இடங் களில்தான் இது காணப்படுகிறது. இது ஐக்கிய அமெரிக்கநாடு, சுவிற்சர்லாந்து ஆகியவற்றை உதாரணமாகக் காட்டிவிளக்குகின் றது. யூகோசிலேவியாவும் அதற்கான உதாரணமென்றே முன் னர் கருதப்பட்டது.

மறு புறத்தில் ஒரு தனி நாட்டு அரசுரிமையாக இருப்பினும் வெளிவிவகாரம் உள்விவகாரம் சம்பந்தமாக சமஷ்டி அரசமைப் பைக் கோரும் நிலைமைகள் (அதாவது அதிக காலம்ஒற்றையாட் சிமுறையாக இருந்தவை) மிக அரிதாகவே இருக்கின்றன. இதற் கான ஒரு உதாரணம் இந்தியாவாகும். இங்கு அதிக வேறு

பாட்டைக் கொண்ட பல இனக் குழுக்களும் வேறுபட்ட சமயங்களும், வேறுபட்ட மொழிகளும் காணபபடுகின்றது. இருந்த போதிலும் தனி அரசாட்சி முறையால் இது ஆளப்படுகின்றது இது சுதந்திரம் வழங்கப்பட்டபோது ஒரு சமஷ்டி அரசியலமைப்பையே தீர்மானித்திருந்தது. எவ்வாறாயினும் இந்தியாவில் பல பிரிவுகள் காணப்படுகின்றன. இவை சமஷ்டியையோ அல்லது அரைகுறையான சமஷ்டி அமைப்பையோ தனியாட்சிக்குப் பதிலாக விரும்பின. உபகண்டத்தை உள்ளடக்கிய மிகப் பெரும் நிலப்பரப்பை இவை கொண்டிருந்தன. இவற்றின் இயல்பியல் தூரம் தொடர் இணைப்புகள் மூலமும், பெரும் சனத்தொகையினாலும், ஏற்கனவே அங்கிருக்கும் மாகாண நிர்வாகங்களினாலும் 1935 ஆம் ஆண்டில் இந்திய விதிகளின் பெரும் அதிகாரப் பரவலாக்கங்களையும் கொண்டிருக்கின்றது. பலஇன மக்களைக் கொண்ட ''கூறுகளினாலான பிரிவு'' என இது அழைக்கப்பட்டது. இதுவேறுபட்ட ஆட்சிமுறைகளுக்குக் கணிசமான அளவு சுய ஆட்சியைப் பேணி வருகிறது.

## சிறிலங்காவில் சமஷ்டி நிலையொன்றிருக்கின்றதா?

சிறிலங்கா சுதந்திரம் பெற்றிருந்தபோது மேலோங்கி இருந்த நிலை இந்தியாவில் கூறுகளான பிரிவுகள் இருந்த போதிலும் அங்கு மேம்பட்டிருந்த நிலையுடன் ஒப்பிடுவது மிகக் கடினமானதாகும். ஒருங்கிணைந்த நாட்டில் இவை வழமைக்கு மாறானவையல்ல. இந்த வேறுபாடுகள் காரணமாகவும் இங்கு காணப்பட்டசில அழுத்தங்கள் காரணமாகவும் சமஷ்டி நிலையொன்று இங்கு உருவாதற்கு உதவின.

தமிழர்கள் அதிகமாக வசிக்கும் பகுதிகளுக்கும் பிரதேச சுயாட்சி வழங்காவிடில் ஒன்றுசேர முடியாதென்பதனாலும் இன வேறுபாடுகளிலிருந்து பிணக்குகள் தோன்றலாமெனக் கருதியும் முதலில் சமஷ்டிக் கொள்கைகள் இங்கு பிரதானமாக எழுந்தன.

சமஷ்டி முதலில் தமிழ் அறிஞர்கள் சிலரால் புரிந்து பேசப்பட்டதொன்றாகும். அரசியல் தலைமைப் பீடத்திற்கு ஏற்றுக் கொள்ளப்பட்ட அதிகார எல்லையில் அவர்கள் திருப்தியடைந்திருக்கவில்லை ஆனால் படிப்படியாக தமிழ்மக்கள் இதில் முன்னேற்றங்கண்டனர். சிங்களம் மட்டுமே உத்தியோகபூர்வ மொழி எனப் பிரகடனம் செய்த பின்னர் அதிகரித்த வேறுபாட்டுணர்வுகள் காரணமாகவும், மக்கள் பிரிவுகளில் வேலைவாய்ப்புக்காக

எழுந்தகுறைப்பாடுகள் காரணமாகவும் ஏற்ப்பட்ட விளைவுகளே இவைகளாகும் வேறு பெரும் அரசியல் மனக் குறைகள்தான் வடக்கு கிழக்குப் பகுதிகளில் அரச குடியேற்றத் திட்டங்கள் மூலம் பெரும் அளவிலான குடியேற்றங்கள் நிறுவப்பட்டமை யாகும். இப்பகுதிகளில் பொருளாதார விருத்திகள் போதிய அள வில் மேற்கொள்ளப்படவில்லை. உயர்கல்வி அனுமதிபில் ஒரே மாதிரியாக அமைப்பதில் முன்னுரிமைக் கொள்கைகள் கடைப் பிடிக்கப்பட்டதனால் அவை தமிழர்களைச் சாத்தியமற்று செயல்படுத்தியது.

இந்த அரசியல் மனக்குறைகள் அவர்களின் திருப்திக்கா கவாயினும் குறை தீர்க்கப்படாமலே இருந்தன. நேர்மையற்று நீண்டகாலமாக இம்முறை கடைபபிடிக்கப்பட்டதுடன் இது வேறுபாடுகளுக்கும் பரந்துபட்ட அதிருப்திகளுக்கும் வழி கோலியது. அத்துடன் ஆட்சி அமைப்பு முறையில் தவிர்க்க முடியாத விளைவுகளையும் கொடுத்தது.

சிங்களத் தேசீயவாதத்தின் கிளர்ச்சியும், மொழியும், நாக ரீகமும் நாட்டின் எல்லாச்செயல்பாடுகளிலும் தங்கியிருந்து ஆட்சி செய்ய வந்த புத்த சமயத்தினதும் சங்காவின் நிலை யும் இந்த உடமை மாற்றங்களுக்குத் தமிழரிடையே உணர் வுகளை அதிகரிக்கச் செய்தன. ஒரு வேளை மற்றச் சிறுபான் மையினரிடமும் இது இருக்கலாம். எனவே இவை சிறிலங்கா வாசி ஒருவரின் எண்ணங்களை முழுமையாக அழிக்காவிடினும் படிப்படியாக அழிக்கின்றன. அத்தகைய அரசிலயமைப்பின் கீழ் சனநாயகம் நன்கு செயல்பட வேண்டுமானால் ஒரு ஒற் றையாட்சிக்குத் தேவையான ஒத்திருக்கும் தன்மையை உடனே செய்தல் வேண்டும். 1976ஆம் ஆண்டில் தமிழர் ஐக்கிய விடுதலை முன்ன்ணி அமைக்கப்பட்டு அவர்களினால் வட்டு கோட்டையில் எடுக்கப்பட்ட தீர்மானம் மூலம் அரசுக்கு எதி திராக ஆயுதப் போராளிகளுக்கு வழிகாட்டி, அரசியல் ரீதி யில் உரிமை கோரப்பட்ட பிரிவினைவாதத்திற்கான இயக் கத்தைத் தோற்றுவித்தது. இதைப் பொருத்தமாக சிறிலங்கா வின் சமஷ்டி நிலைக்கான சாட்சியமாகக் கொள்ளல் வேண் டும். இதில் கேள்வி என்னவென்றால் ஒற்றையாட்சி முறை யான அரசின் எந்தச் சாயலையும் கொண்டிராத சமஷ்டி முறையான அமைப்பு உண்மையெனக் கொள்ளக் கூடியவாறு இப்போது பிரேரிக்கப்பட்டுள்ளது. இது பிரச்சினைக்குத் திருப் திகரமானதும் சாத்தியமானதுமான ஒரு தீர்வாகும்.

# உணர்ச்சி

என்னடா தோழா செருக்களமா? அட
எங்கேயடா? எனக் கூவிச்
சொன்னவன் நின்ற மலை முடியின்மிசை
துள்ளி அவாவுடன் தாவி
என்னிரு கண்கள் எதிரினிலே தொலை
இடத்தி லெதிர்ப்படை கண்டேன்!
பின்னோரு வார்த்தை யுரைப்பதுண்டோ? கொடி
பிடித்துப் பறக்குது தானை!

குற்றங்கள் தாவிக் கொடும் பகைவர் தலை
கொண்டு வரும்படை போலே
சென்றது தானை செருக்களத்தின்மிசை
செப்புகிறார்......... அட மாற்றார்
கொன்றிடல் போலும் வசைமொழிகள்! எழில்
கொஞ்சுந் தமிழ்மொழி மேலே!
நன்றடா நன்று... பிறமொழிகள் தமிழ்
நாட்டை யழிக்கவோ? பார்ப்போம்!

சித்திரச் சோலைப் புறத்தினில் வானிடை
சிறகை அடித்தொலி செய்தே
கத்திப் பறந்த பறவை அணியெனக்
காற்றில் பறக்குது தானை!
புத்தொளி வீசும் விழிகளைப் பாடவோ?
முச்சுப் புயலை எழுதவோ?
தத்து நடைத்தமிழ் தானநடையினைப்
பாடத் தகுமோ தமிழரே?

— உணர்ச்சிக் கவிஞர் காசி ஆனந்தன்

# உறுதியின்
# உறைவிடத்தில் . . .

உங்கள் கால்கள் தேடிய
'எல்லையை' அடையும்வரை
உங்கள் கரங்கள் ஏந்திய
துப்பாக்கி பார்த்த 'குறி' யை நோக்கி
உங்கள் இதயம் சுமந்த
'இலட்சிய தாகத்தை' சுமந்து
உங்கள் உதடுகள் சொல்லத் துடித்த
தேசிய கீதத்தை சொல்வதற்காய்'
நீங்கள் சுவாசிக்க நினைத்த
'சுதந்திரக் காற்றை' தேடிக்கொண்டு
உங்கள் கண்கள் கண்ட
'கனவு' களை நனவாக்க
உங்கள் காதுகள் கேட்ட
அதே, அதே ....'கட்டளை' யின் கீழ்
நாங்களும் உங்களை நோக்கித்தான்!
உங்கள் ஆத்ம சாந்திக்காய்
நாங்கள் சமர்ப்பிக்கத் துடிப்பது
'வீர வணக்கங்களை' மட்டுமல்ல
தமிழீழத்தின்
'விடுதலை' யையும் சேர்த்துத்தான்.

கப்டன் வானதி